OFFICE OF ... REGISTERED
2 - JUL 1910
MADRAS.

# வித்யாவிநோதினி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I.<br>Vol I. | சாதாரணஹு வைகாசிமாதம்<br>May 1910 | சஞ்சிகை 9<br>No. 9 |

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

### மகாராஜச் சக்கரவர்த்தி ஏழாம் எட்வேர்டு அவர்களுடைய மரணம்

1910ஹு மேமீ 7உ காலை 7-மணி 20-நிமிஷத்திற்கெல்லாம் பிரிட்டான்னிய சார்வ பௌமத்திற்கு மகாராஜாவாகியும், இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாகியும் விளங்கிய சத்திரபதி ஏழாம் எட்வேர்ட் அவர்கள் தெய்வகதியடைந்ததாகிய மகத்தான துக்க சமாசாரத்தை அபிமானிகளுக்கு இதனால் அறிக்கையிடவேண்டியாகிறது. பகவத் சங்கற்பத்திற்கு மாறாக யாதொன்றுமில்லையாதலால், இதையும் மற்ற சம்பவங்களைப்போலவே, பிரசாதமாக வாங்கிக்கொள்ளவேண்டியது நமது கடமையென்பதில் ஐயம் சிறிதுமில்லை. என்றாலும், மனுஷிய யத்தனத்தில் இவ்வளவு சீக்கிரம் இது நடந்தேறிவிடுமென்று நாமொருவரும் நினைக்கவேயில்லை. சக்கரவர்த்தியவர்களுக்குத் தேகஸ்திதி கொஞ்சநாளாக நன்றாயில்லையென்று அப்போதப்போது பிரஸ்தாபமிருந்தது வாஸ்தவமே. ஆயினும் இப்படித் திடீரென்று முடிவு வந்துவிடுமென்று நாம் யாரும் சங்கிக்கவில்லையென்பதும் வாஸ்தவமேயாம். ஆதலால் இந்தச் சங்கதியைச் சாமான்னியமாய்க் கேட்டவரொருவரும் நம்பவேயில்லை. பத்திரிகை மூலமாகவும், சர்க்கார் உத்தியோகஸ்தர் மூலமாகவும் தெரிந்தபின் தான் அனேகர் நம்பினார்கள்.

பெரிய உற்பாதங்கள் தோன்றினால், வெறுமனே போவதில்லையென்று நம்மவருள் பலத்த நம்பிக்கை. ஆகவே ஹாலிதூமகேது இப்பொழுது கொஞ்சநாளாகக் கண்டு வருவதற்குச்சரியானபலன் கிடைத்துவிட்டதென்று அனேகர் வருத்தப்படுவது நமது காதில் விழுந்து வருகிறது. ஆனால் நமக்குமட்டும் இது காரண காரியங்களைச் சம்பந்தித்துப் பேசும் பேச்சாகக் காணவில்லை.

எப்படியான போதிலும் இத்தருணத்தில் சக்கரவர்த்தியவர்களுக்கு முடிவுவந்தது மெத்தவும் துக்கிக்கவேண்டிய விஷயம். பிரிட்டானிய ராச்சிய நியமங்களில் வெகு முக்கியமான இரண்டொரு அம்சங்கள் இப்போது தர்க்கத்திலிருக்கின்றன. கக்ஷி வலுத்து வருகிறது. இத்தருணத்தில் வயது, ஞானம், அனுபவம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து விளங்கிய மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் ஒருவர் தாம் கக்ஷிகளைச் சமாதானப்படுத்தி, நடுநிலை கோணாமல், எல்லோருக்கும் திருப்தி யுண்டாக்கக் கூடியவர்கள். ஆகவே இப்படித் திடீரென்று உண்டான சம்பவம் எல்லாக் கக்ஷியாருக்கும் நஷ்டமென்பதில் சந்தேகமில்லை.

எட்வேர்ட் சக்கரவர்த்தியவர்கள் 1841௵ நவம்பர்மீ 9-தேதி பிறந்தவர்கள். பிறகு காலக்கிரமத்தில் தனது பதவிக்குரிய வித்தைகள் அனேகம் கற்று, தேசாந்தரங்களில் யாத்திரை செய்து, லோக விவகாரங்களை அனுபவத்திலறிந்து, பலவகை உத்தியோகங்களிலமர்ந்து, ராச்சியபரிபாலனக் கிரமங்களை வேண்டியமட்டில் கற்றூர்கள். 1863-ம் ௵த்தில் இவர்களுக்கு விவாகம் ஆகி, 1864-ம் ௵த்தில் கொஞ்ச காலத்திற்கு முன் இந்தியாவுக்கும், இதர தேசங்களுக்கும் விஜயம்செய்து, பிறகு அகாலமரணம் அடைந்த பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் என்ற மூத்த குமாரனும், 1865-ம் ௵த்தில் அவருக்கு அடுத்து, இப்போது ராச்சியபாரம் வகிக்க வேண்டியவராகிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியும், பிறகு வேறு ஸ்திரீப்பிரஜைகளும் பிறந்தார்கள்.

விக்டோரியா சக்கரவர்த்தினியவர்களுக்குப் பர்த்தாவினுடைய வியோகம் நேரிட்ட பிறகு, தினசரி நடக்கவேண்டிய அனேக காரியங்களுக்கு நமது சக்கரவர்த்தியவர்களும், அவருடைய ராணியுமே முகாமையாக நின்றூர்கள். அது முதல், அவர்களுக்கு ராஜகாரியங்கள் இருந்துகொண்டே வந்தன. 1877-ம் ௵த்தில் அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்ததில், நமது தேசத்திய பட்டவர்த்தனர்களும்; மகா ஜனங்களும் எவ்வளவிற்கு அவரை உபசரித்தார்களென்பது இப்போது 45-வயது மேற்பட்ட எல்லோருக்கும் தெரியும். கடைசியாக மகாராணியவர்களுக்கு 1901௵த்தில் மரணம் சம்பவிக்கவே, அந்த ராச்சியபாரம் பூராவும் சக்கரவர்த்தியவர்கள் வகித்து இப்பொழுது ஒன்பது௵ மூன்று மாதம் பதிஞன்கு நாளாகிறது.

ராச்சியபாரம் வகிக்குமுன்னமே எல்லாக் காரியங்களிலும் அனுபவம் வேண்டியமட்டிலிருந்ததால், சக்கரவர்த்தியவர்களுக்கு இந்த ஒன்பது சில்லரை வருஷங்களில் வேண்டாததைச் செய்துவிட்டோமே யென்கிற பச்சாத்தாபம் உண்டாவதற்கு இடமேயில்லை. ஐரோப்பா கண்டத்திலும், அமெரிக்காமுதலிய கண்டங்களிலும், இப்போது அதிகாரம் செலுத்துபவரனைவரையும் அவர்களுக்கு ரூபரூபில் பரிசயம் இருந்தபடியால், அந்தச் செல்வாக்கைக்கொண்டு அனேக சண்டை சச்சரவுகளை விலக்கி எங்கும் சமாதானம் பிரபலிக்கச் செய்வது இவர் தமக்கு முக்கியமாகக் கொண்ட விரதம். தமது மகுடாபிஷேகமாவதற்கு முன் திரான்ஸ்வால் யுத்தம் நின்றுவிடவேண்டுமென்றும், தமது சார்வபௌமத்தில் அக்காலத்தில் எங்கும் பிரஜைகள் தத்தம் அலுவலிலிருந்து க்ஷேமம் விருத்தியாகப் பார்க்கவேண்டுமென்றும் இவர்கள் கோரியதாகத் தெரியும்.

ஆங்கிலேய அரசர்கள் நியமத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் கட்டுப்பட்டு ஆளுபவர்கள். அந்தப்படி ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களுக்கு விரோதமின்றி நடக்கவேண்டிய சகலகாரியங்களிலும் சக்கரவர்த்தியவர்கள் இராப்பகல் ஜாக்கிரதையாகவிருந்து உழைத்து வந்தது யாருமறிந்தவிஷயம். ஆதலால் பழைய காலத்தில் தச

ரத மகாராஜா சொல்லியபடி, "நாமும் நமது வமிசத்தவர்களுடைய ஸ்மிருதிகளை யனுசரித்துப் பிரதிதினமும், தூங்காமல் சக்தியா்னுசாரம் பிரஜைகளைப் பாலிப்பதிலேயே கண்ணுயிருந்து வந்திருக்கிறோம்," என்று எட்வேர்ட் சக்கரவர்த்தியவர்களும் தாராளமாய்ச் சொல்லலாம்.

ஒருவிஷயம் நம்மவர்களுக்கு விநோதமாகக் கண்டாலும், இந்த ரகசியத்தை அது நன்கு விளக்கும். அதாவது, சக்கரவர்த்தியவர்கள் இப்போது வெகு வருஷங்களாக க்ஷவரம் செய்து கொண்டதில்லை. மேனாட்டுச் சம்பிரதாயத்தில் தினமும் க்ஷவரம்செய்துகொள்ள வேண்டி வருவதால், அதை நிறுத்திவிட்டு, அம்மூலமாகத் தினம் 10-நிமிஷம்போல் ராஜகாரியங்களுக்காக மீத்துக் கொண்டார்களென்று முன்னொருமுறை நாம் படித்திருக்கிறோம். ஆதலால் ராஜகாரியத்தைத் தம்மாலியன்றமட்டில் நடத்தி வருவதாகத் தீக்ஷைவகித்தார்கள் போலும்!

பலபேச்சுகளால் பிரயோஜனமில்லை. முடிவோ வந்துவிட்டது. மேல் நடக்கவேண்டியதைத் தான் யோசிக்கவேண்டும். அலெக்ஸாண்ட்ரா மகாராணி விசனத்தில் மூழ்கியிருப்பதாகவும், யார் சமாதானம் சொல்லியும் கேட்காமல் கதறுவதாகவும் சமாசாரம். அந்த அம்மைக்கும், இப்போது சக்கரவர்த்தியாகிற மகாராஜா ஐந்தாவது ஜார்ஜ் அவர்களுக்கும், மற்றுள்ள .குடும்பத்தவருக்கும் இந்தியாவிலுள்ள நம்மவர்களுடைய அனுதாபத்தை நாம் அறிவிப்பதுடன், நேரிட்ட விபத்தைப் பொறுக்கும்படியான சக்தியைப் பகவானருள்வாரென்றும் நம்புகிறோம்.

நமது புதிய மகாராஜச் சக்கரவர்த்திக்கு இப்போது 45-வயதாகிறது. இராச்சிய தந்திரங்களெல்லாம் கற்றுமிருக்கிறார். ஆதலால் இப்போது நடக்கவேண்டிய பெருங் காரியங்களை அழகாக நடத்துவதுடன், இனி வருங் காலத்திலும் பிரிட்டானியா சார்வபௌமம் செழிக்குமாறு வேண்டிய காரியங்களைக் கால தேச வர்த்தமானங்களை யனுசரித்து, மகா ஜன க்ஷேமத்தையே நாடி, நடத்தும்படியான சக்தியையும், புத்தியையும் ஈசுவரன் நமது புதிய சக்கரவர்த்தியவர்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டுமென்றும், அவர்களை நீடூழி வாழும்படி பிரசாதிக்கவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கிறோம்.

சாமான்னிய ஜனங்களுக்குள் தாய் தந்தையர் முதலிய பெரியோர் இறந்தால் துக்கங் கொண்டாடுவது முதற்கடமை. அதற்காக நித்திய விதிகள், நைமித்திகங்கள் முதலிய யாவும் நின்றுவிடும். ஆனால் ராஜாக்களுக்கு இது சாத்தியமல்ல. "சிநேகம், தயை, சௌக்கியம் முதலியவைகளையும், வேண்டி வந்தால் இதோ எனக்குப் பிராணபதமாயிருக்கும் சீதையையும், நமது பிரஜைகளுடைய திருப்திக்காகத் தள்ளிவிடச் சித்தமாயிருக்கிறேன். ஆதலால் (க்ஷத்திரிய தருமத்தை முதன்மையாகக் கொண்ட) எனக்கு விசனமேது?" என்று ஸ்ரீராமன் முந்தியொரு காலத்தில் சொல்லியதே இவர்களுக்கு ஏற்ற தருமமாம். ஆதலால் இந்த முறைப்படி மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் இறந்ததும், அவர் மகனும், இப்பொழுது நமக்கு மகாராஜச் சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜ் அவர்கள் தமது துக்கத்தை ஒருபுறம் ஒதுக்கிவைத்து, 'பிரிவீ கவுன்சிலர்கள்' என்னும் முதல் வகுப்புப் பிரபுக்களை வரவழைத்து, நடந்துபோனதை அவர்களுக்குத் தெரிவித்து, அது காரணத்தினல் அந்த அதிகாரத்தைத் தாம் வகித்து ராச்சியபாரத்தை நடத்திவரவேண்டியிருப்பதைத் தெரிவித்தார்கள். அம்மட்டேயன்றி, தாம் தமது முன்னோர்கள் ஒப்புக்கொண்ட சகல நியமங்களையும் ஒப்புக்

கொள்வதாகவும், சட்டங்களெல்லாம் கிரமப்படி ஜாரியிலிருக்கவேண்டு மென்றும் பிரசாதித்தார்கள்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அவர்கள் கிருபைகூர்ந்தருளியது நம்மவர்களுக் கெல்லாம் கேட்க வெகு சந்தோஷகரமானதேயாம். அது வருமாறு:—"நமது தகப்பனாராகிய மாஜிமகாராஜச் சக்கரவர்த்தியவர்களுக்கு இந்தியாவின் க்ஷேமவிஷயத்தில் இவ்வளவு அக்கரையிருந்ததென்று அளவிடுவதற்கில்லை. நாம் அவ்விடம் விஜயம் செய்ததில், நம்முடைய அனுபவத்திலும் இந்திய மகா ஜனங்களுக்குள்ள ராஜபக்தி தெளிவாகி யிருக்கிறது...... ஆதலால் நமது இந்திய சார்வபௌமம் தழைத்தோங்க வேண்டுமென்னும் ஆக்கிரகம் நமக்கு எப்போதும் மேலிட்டிருப்பதுடன், அது விஷயத்தில் மேற்சொல்லிய மாஜிசக்கரவர்த்தியவர்களுக்கும், அவருக்கு முந்தியிருந்த விக்டோரியா சக்கரவர்த்தினியவர்களுக்கும் எப்படி அக்கரையிருந்ததோ, அப்படியே நமக்கும் இருக்குமென்பதை இந்திய மகா ஜனங்கள் அறிய வேண்டுகிறோம்,'' என்றருளி யிருக்கிறார்கள்.

இதுமட்டுமன்றி நமது சக்கரவர்த்தியவர்கள் முந்தி பிரின்ஸ் ஆப்வேல்ஸ் தரபில் இந்தியாவுக்கு வந்து, திரும்பி இங்கிலாந்து போய்ச் சேர்ந்தபின் பேசியதை இப்போது எல்லோரும் கவனிக்கவேண்டும். அவர் அக்காலத்தில் சொல்லியது:—"இந்திய மகா ஜனங்களுக்கிருக்கும் பொறுமையும், சத்துவகுணமும், ராஜபக்தியும், தெய்வபக்தியும் எனக்கு நன்றாகப் புலப்பட்டிருக்கிறது. நமது ராஜாங்கம் கோல் கோணாமல் நடக்குமென்பது அவர்களுக்கு நிஷ்கரிஷையாய்த் தெரியுமென்றும் நான் அறிவேன். ஆனாலும், நான் கண்டதையும் கேட்டதையும் கவனிக்குமிடத்து, இந்த ராஜாங்கத்தில் அவர்கள் விஷயத்தில் கருணை யின்னும் கொஞ்சம் அதிகரிக்குமாகில், துரைத்தனம் இன்னும் எத்தனையோ சுலபமாகி விடுமென்று தான் நான் சொல்லவேண்டி வருகிறது. எவ்வளவிற்கு நாம் மகா ஜனங்களுடைய சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்படுகிறோமோ, அவ்வளவிற்கு அவர்களும் ஒன்று பத்து, நூறாக நம்முடைய சுக துக்கங்களுக்குப் பாத்தியப்படுவார்களென்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். துரைத்தனத்தை நடத்துவதில் அவர்களை யின்னும் கொஞ்சம் நெருங்கவிட்டு, அவர்களுடைய நாணயத்தில் நம்பிக்கைவைத்து, தேச க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்களில், அவர்களுக்கும் பொறுப்பு அதிகரிக்கச் செய்வதில், எல்லாக்கக்ஷியாருக்கும் க்ஷேமமல்லவா ?'' என்றார்.

இதையனுசரித்துச் சென்ற இரண்டு வருஷ காலமாக நடக்கும் துரைத்தன விமர்சனங்களை எல்லோரு மறிவார்கள். ஆகவே இப்பொழுது தொழில் தெரிந்த அரசன் பட்டத்திற்கு வந்திருப்பதால், இந்தியாவுக்கு ஒரு குறைவுமில்லை யென்று நம்பலாம். நமது சக்கரவர்த்தியவர்களுக்கு இப்பொழுது வயது 45-ஆதலால் இனி வெகுகாலம் அவரையும், அவருடைய ராணியையும், பகவான் அனுக்கிரகித்து, தேசக்ஷேமத்தை முன்னிட்டு உழைக்கவேண்டியதற்கு உதவியான தேகபலம், புத்திபலம் முதலியவற்றை யருளவேண்டி நாம் மனப்பூர்வமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் மாஜி மகாராணியாகிய அலெக்ஸாண்ட்ரா சக்கரவர்த்தினியவர்களுடைய துக்கத்தைப்பற்றிச் சற்று விசாரிப்பது அவசியமாம். நமது மாஜிச்சக்கரவர்த்திக்கு இவர் மனைவியாகி சுமார் 47 வருஷமாகிறது. இவ்வளவுகாலம் 'மருவிய

காதன் மனையாளாகிப்' பிள்ளை பெண்களைப் பெற்று, சுக துக்கங்களை யனுபவித்தவருக்குத் திடீரென்று விபத்துவந்தால் சகிப்பது அரிதென்று சொல்லவும் வேண்டுமா? ஆகவே அவர் அளவற்ற துக்கத்தில் மூழ்கியவராகி, ஆகாராதிகள் வேண்டாமல், வெகு தூரம் அங்கலாய்த்து வருவதாக முதல் சமாசாரம் வந்தது. என்றாலும், அவர் அனுபவசாலியும், வெகு புத்திசாலியுமாதலால், பேச்சுக்கிடங்கொடாமலும், தமது பதவியை மறவாமலும், ஜனங்கள் தமது விஷயத்தில் படும் அனுதாபத்தை யறிந்து இவ்வாறு அதற்குப்பதில் வரைந்திருக்கிறார்:—"எமது அருமைப் பிரஜைகள் எல்லோரும் எமக்கு நேரிட்டவிபத்தைத் தங்களுடையதாகப் பாவித்து இவ்வளவு தூரம் எம்மைத்தேற்ற முயன்றதற்குப் பிரதியாக, எமக்கு மகத்தான துக்கமிருந்தபோதிலும், அதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, எமக்குள்ள நன்றியை அவர்கள் அறிய வேண்டுகிறோம். எமக்குள்ள பிரபஞ்சமெல்லாம் பிராணபதமான எமது பர்த்தாவுடன் ஒழிந்து போய்விட்டதன்றி, இந்த ராச்சியத்திலுள்ள மகா ஜனங்களுக்கும், உற்றாரிற் சிறந்த பிதாவுக்குச் சமதையான மகாராஜா சடுதியிலிறந்ததனால் பெருத்த நஷ்டம் உண்டாகியிருக்கிறது. இந்தப் பேராபத்தைப் பொறுத்து நடந்து கொள்ளவேண்டிய பலத்தை நமக்குப் பகவான் அனுக்கிரகிக்க வேண்டும். இப்படிப்பட்ட விபத்தை நாமடைய வேண்டுமென்பது அவருடைய சங்கற்பமாதலால், அது நிறைவேறத்தான்வேண்டும். இனி எமக்குள்ள தசையில் நான் அனுபவிக்கவேண்டிய துக்கங்களைச் சாந்தமாக அனுபவிக்கவேண்டி, அதற்கு அனுகூலமான மனோதிடத்தைப் பகவான் அருளவேண்டுமென்று நீங்களெல்லோரும் பிரார்த்திக்கக் கோருகிறோம். எமதருமை மகனை உங்கள் அதீனமாக்கிபிருக்கிறோம். அவருக்குவேண்டியபடி உதவிசெய்து வருவது உங்கள் பாரம். அவரோ தமது அருமைத் தகப்பனாருடைய வழியையே அனுசரிப்பாரென்பதில் சந்தேகமில்லை. ஆதலால் அவர் தகப்பனாரிடத்தில் உங்களுக்கிருந்த பக்திக்குக் குறைவில்லாமல் அவரிடத்திலும் இருக்கவேண்டுமென்று நாம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். எமதருமை மகனும், எமது மருமகளுமே, இந்த மரியாதையை வகித்து இதைத் தக்க வைத்துக்கொள்ள எக்காலத்திலும் அக்கரையுடன் உழைத்து வருவார்களென்று எனக்குத் தெரியும்," என்கிறார்.

இது ஒரு மகாராணி யளிக்கும் உத்தரவல்லவென்றும், கல்வி, விவேகம் முதிர்ந்த பழைய காலத்திய இந்திய தேவிமார்களில் ஒரு பெரிய அம்மை, தம்மைப்போல் ஆணைப்பெண்ணைப் பெற்று, ஆணுடன் பெண்ணுடன் பிறந்து, சுகதுக்கங்களை யனுபவித்திருக்கும் மற்ற குடும்பங்களிலுள்ள பெரியோரிடம் தமது துக்கத்தை விவரித்துப் பிரஸ்தாபிப்பது போலவே அபிமானிகளுக்குக் காணுமென்றும் நம்புகிறோம். ஆதலால் இத்தகைய பெருந்தேவிக்கு நமது சம்பிரதாயப்படி காலக்கிரமத்தில் அக்ஷயமான புண்ணியலோகமும், இங்கு உள்ளளவும் சாந்தமும் கிடைக்கும்படி சருவேசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

**மதிராசு சட்ட நிருபண சபை**

சென்ற எப்பிரல்மீ 5உ இந்தச்சபை கூடியதில், வழக்கப்படி கனம் மெம்பர்கள் அனேகம் கேள்விகள் கேட்டுப் பதில் வேண்டினார்கள். இரண்டொன்று மட்டும் நமக்கு விசேஷித்துக் காணுவதைச்

சுருக்கி யுரைக்கிறேம். கும்பகோணம் காலேஜ் விஷயமாக ஒரு கேள்வியிருந்தது. கேட்டவருடைய தாற்பரியம், அந்தக்காலேஜ் பல வருஷங்களாக நல்ல ஸ்திதியில் இல்லையென்றும், அதை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் நடக்கவேண்டுமென்றும், இருந்ததாகக் காணுகிறது. சர்க்கார் ஒருவகையாக ஜவாபு செய்தார்கள். அதுவும் சரியென்றே காணுகிறது. ஏனெனில், படிக்கும் பிள்ளைகளுடைய சங்கியையில் விசேஷக்குறைவு காணவில்லை. காலேஜ்சிப்பந்தியும் கிரமமாகவேயிருந்து வந்திருக்கிறது. ஆதலால் குற்றங் கூறுவதற்கு இடமில்லையென்பதே.

மற்றொரு கேள்வி கோயமுத்தூரில் நடந்துவரும்செட்டில்மெண்டைப் பற்றியது. சென்ற முப்பது வருஷங்களாக அந்த ஜில்லாவில் நடந்த சமாசாரங்களையும், குடியானவருடைய நயநஷ்டங்களையும், விசாரித்துச்சர்க்கார் இந்த செட்டில்மெண்டு வகையில், நன்செய்க்கு 100-க்கு 15-வீதமும், புன்செய்க்கு 100-க்கு $12\frac{1}{2}$-வீதமும், தீர்வை உயர்த்தலாமென்று அபிப்பிராயப்பட்டதில், கோயமுத்தூர் வட்டத்திற்குக் கனம் மெம்பராக வந்திருப்பவர், இந்த விகிதம் ஏற்பட்டதற்கு விவரம் தெரிய வேண்டுமென்றும், நன்செய் புன்செய் இரண்டிற்கும் ஒரே ரீதியாகத் தீர்வை உயரலாமென்றும் அறிவித்தார். அவருடைய கருத்து இந்த இருவகைப் பூமிக்கும் $12\frac{1}{2}$-வீதம் உயர்வது போதுமென்பதுபோலும். சர்க்கார் இதற்குப் பதிலாக, அகவிலையைச் சுட்டிக்காட்டி, அது 78-ம் வருஷத்திலிருந்ததைவிட 100-க்கு 33-வீதம் நன்செயிலும், 65-வீதம் புன்செயிலுமிருப்பதால், இரண்டிற்கும் 15-வீதம் உயர்த்துவது நியாயமென்றும், ஆனல் புன்செய்க்கு அனுவிருஷ்ட்டி முதலிய உபத்திரவமிருப்பதால், அதற்குக் கொஞ்சம் தாராளமாக விடுவது நலமென்றும் உத்தேசித்துச் செய்ததாகப் பதில் கூறினர்கள்.

வெகு காலமாக மகா ஜனங்களுடைய பக்ஷமாகப் பேசிவரும் நம்மவருக்கும், சர்க்கார் பக்ஷம் பேசிவருபவருக்கும், செட்டில்மெண்டு என்கிற இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஒற்றுமையென்பதே யில்லாமலிருந்து வந்திருப்பது ஒருபெரிய விசேஷம். இதுவரையில் இதற்கு என்ன நியாயமிருந்தாலும், சட்ட நிரூபணசபை விமர்சனமாகிப் பிரதி நிதிகள் பெருத்திருப்பதால், இனியாவது இம்மாதிரி விஷயங்களில் ஒற்றுமை காணுமாறு ஏதாகிலும் சாதன மேற்பட வேண்டுமென்பது நமது கோரிக்கை.


ஆப்காரி விஷயமாகப் பேசியதில், சர்க்கார் மெம்பராகிய கனம் ஆட்கின்ஸன் துரையவர்கள் இரண்டொரு பெரிய ரகசியங்களை வெளியிட்டார்கள். ஜனங்களுக்குள் குடி அதிகரிக்காமலிருப்பதற்காக ஆப்காரி டிபார்ட்மெண்டார் செய்துவரும் பிரயத்தனங்களை விளக்கிவிட்டு அவர் சொன்னர். "ஒரு சங்கதி பிரத்தியக்ஷம். சுமார் 2000 கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும் இப்போது மூடிக்கிடக்கின்றன. ஆதலால் இவ்வளவிற்குக்கள்ளும், சாராயமும், மட்டுப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கும் ரிவினியூ குறையும். என்ருலும், மகா ஜனங்களுக்குள் குடி மட்டுப்படவேண்டு மென்பது நமது ஆக்கிரகமாதலால், கடைகளைச் சுருக்கியே வருகிறேம். ஆனல் 'குடி' யென்னும் துர்வழக்கத்தைச் சட்டமூலமாகத் திடீரென்று நிறுத்துவது யாராலுமுடியாது. இப்போது நாம் செய்துவருகிறபடி குடிப்பவர்களுக்குச் சௌகரியங்களைக் குறைப்பதனல், ஏதாகிலும் நற்பயனுண்டாகுமோ வென்பது காலக்கிரமத்திலறியவேண்டிய விஷயம். ஒரு தோஷம் மட்டும் வளருமென்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதாவது, திருட்டு வியாபாரமாம்," என்று.

திருட்டுத்தனம் அதிகரிக்குமோ, குறை

யுமோ, நமக்குத் தெரியாது. ஆனால் கள்ளும், சாராயமும், வேண்டிய விடங்களிலெல்லாம், எக்காலத்திலும், எவ்வளவாகிலும், கிடைக்கக்கூடிய அவஸ்தைக்கும், இவ்விஷயங்களிலெல்லாம் நிர்ப்பந்தம் அதிகரித்து வரும் அவஸ்தைக்கும், வித்தியாசம் வெகுவாய்த்தானிருக்கவேண்டுமென்பது நமது பூர்வீகருடைய அனுபவம். பொன், மது, பெண், முதலிய காம்மிய வஸ்துக்கள் கிட்டாமலிருப்பதே விரக்திக்கு முக்கியகாரணமென்பதும் பழைய சித்தாந்தமாம்.

இந்த விஷயமாய்ச் சமீப காலத்தில் பலர் நெல் 'ஒற்றை நாத்து' நடவு பலவிதமாக எழுதிவந்திருக்கிறார்கள். என்றாலும் மதிராசு விவசாய டிபார்ட்மெண்டு கவர்ன்மெண்டு டிப்டி டைரெக்டர் ஸ்ரீமான் ஸாம்ஸன் துரை சமீப காலத்தில் எழுதியதை இங்கு பிரசுரிப்பது யுக்தமாகக் காணுவதால்அப்படியே செய்கிறோம்:—"யாருக்கு நஞ்சை பூமிகளிருக்கின்றனவோ, யார் நெல்லை 'நாத்து' நடுகிறார்களோ, அவர்களெல்லோரும் தயவு செய்து 'நாத்தை'ப் பிடி பிடியாக நடாமல், ஒவ்வொன்றாக நட்டுப் பார்க்க வேண்டும். கிருஷ்ணா ஜில்லாவில் இது சாதாரணம். அந்த ஜில்லாவில் நெல் விளைவதுபோல் வேறெங்கும் காணுவதில்லை. தஞ்சாவூர், திருநெல்வேலி ஜில்லாக்களிலும் இப்போது அனேகம் பெயர்கள் இவ்வாறு செய்து நற்பயனடைகிறார்கள். சம்பான், பிஷாணம் இந்த வர்க்கங்களிலுள்ள எல்லாத் தினுசுகளும் ஒற்றையாக நட்டால் நல்ல விளைச்சலுண்டாகும். தவிர விதை முதலும், நடவுகூலியும் குறைகிறது. களை, பாசி முதலியன உண்டாகாமல் பார்த்துக்கொள்ளுவதற்கும், ஜலம் தாராளமாகப் பாய்வதற்கும், சௌகரியமுண்டு. விதைப்பாத்தியில் விதை 'விலாசமாக'த் தெளிப்பதால், முளைப்பயிர்கள் வலுத்து வருவதற்கிடமுண்டு. தண்ணீர் தட்டினால் ஒற்றைப்பயிர் கொஞ்சகாலம் கூடியே தாங்கும். பயிருக்கு நோய்விழுவதில்லை. நெல்மணி உறைப்பாகவும், கனம், நீரோட்டம் முதலிய குணங்கள் அதிகரித்தும் காணும். ஆதலால் பதரும், உமிகனமும் குறையும். எழு பட்டணம்படி விதையை எழு செண்டு பூமியில் விதைத்து, ஒரு ஏகரா நடவு நடலாம். விதை இம்மாதிரி விளைச்சலிலிருந்தே எடுத்து விதைப்பது திறம். 'நாத்துகள்' முற்றிப்போகாமற் பார்த்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக ஐந்து மாதத்தில் விளையும் தினுசை விதைத்து ஐந்து வாரத்திற்குள் நட்டாகவேண்டும். பூமியின் தரம் உயர, உயர, இடையதிகரிக்க வேண்டும். முதல் தரமான பூமிகளில் சுமார் ஒருசாண், அல்லது அதிகமாகவே பயிர் இடைவிட்டிருப்பது நல்லது. முதன் முதல் இந்த முறைப்படி நட்டவர்களைப் பக்கத்திலுள்ளவர் பழிப்பது சகஜம். நட்டவுடன் வயலைப்பார்த்தால் கண்ணுக்குத் திருப்தியாயிராது. என்றாலும் இதனால் குடியானவன் மலைக்கக்கூடாது. பயிர் நன்றாக உறைத்துத் தூறுகட்டியபின் வயலைப்பார்க்க வேண்டும். வெகு திருப்திகரமாக இருக்கும்," என்றார்.

இதற்கு ஒராக்ஷேபமட்டும் நாம் கேட்டிருக்கிறோம். நெல் இந்த முறைப்படி நல்ல விளைச்சல் ஆனாலும், புல் அவ்வளவாகக் கால்நடைகளுக்கு ருசிப்பதில்லையென்கிறார்கள். ஆனால் நெல்லை நோக்கிப் புல்லையும் கவனிப்பதன்றி, நேர்விரோதமன்று. ஆதலால் இதை எல்லோரும் பரீக்ஷிக்கவேண்டியதுதான். கோயமுத்தூர் அக்ரிகாலேஜில் இவ்விதமாகப் பயிரிட்டதில், நீரோடும் வாய்க்காலில் நட்ட நாற்றொன்று இருநூறு தூறுக்குமேல் விட்டு வளர்ந்துவந்ததில், அதைப் பொட்டகிறுப் பிடித்தார்கள். அதை யிங்கு ஒரு சுமாராகக் காணலாம். அம்மாதிரியே ஒவ்வொரு பயிரும்



நெல் ஒற்றை நாத்துப் பயிர் 200-க்கு மேல் தூறு கட்டியது

தூறு கட்டினுல் ஒவ்வொரு பூமியிலும் விளைச்சல் இருபது பங்கு ஆகிவிடும். ஆனுல் அது பேராசை. மொத்தத்தில் நெல் மணி நன்ருக ஊறுவதற்கு இதனுல் இடமுண்டாவதும், வைக்கோல் தடித்துக் கால்நடைகளுக்குக் கொஞ்சம் மட்டத்தரமான தீனியாவதும் வாஸ்தவம்.

சென்ற மார்ச்சுமீ 19, 20-தேதிகளில் சேலம் கஸ்பாவில் ஒரு பெரிய கோ ஆபரேடிவ் மீட்டிங்கு நடந்தது. அந்த ஜில்லாவில் கிராமப்பாங்குகள் ஒரு வருஷத்திற்குள் வெகு துருசாகப் பெருகி, இப்பொழுது 82-பாங்குகள் செழித்து வருகின்றன. இவைகளுக்குதவியாகவும், டவுனில் ஏழைகளுக்கு உதவுவதற்காகவும், அர்பன் பாங்கு ஒன்று பெரிதாகிக் கஸ்பாவில் சீராக நடந்துவருகிறது. இவைகளெல்லாம் சென்ற வருஷம் செய்த காரியங்களைப் பரஸ்பரமறிவிக்கும் பொருட்டும், அதனுல் பரஸ்பரம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்து கொண்டு, தோஷங்களை நீக்கி, குணங்களைக் கிரகித்து, நன்மையடையும் பொருட்டும், இவைகளெல்லாவற்றிலு மிருந்து சுமார் 150-பிரதிநிதிகள் வந்து கூடினுர்கள். இவர்களில் வழிச்செலவிற்குவகை குறைந்தவர்களுக்கு அந்தந்தக் கிராமப்பாங்குகள், 'செல்லம் வகை'யிலிருந்து பணங்கொடுத்தனுப்பினுர்கள். இது மெத்தவும் அங்கீகரிக்கத்தக்கதாம். தருமத்திற்காகவே எல்லாரையும், எல்லா வேலைகளையும் செய்யச்சொன்னுல் அது நீடித்து வாராதாகையால் 'மாரடித்த கூலி மடிமேல்,' என்றநியாயமே இம்மாதிரிக்காரியங்களுக்கெல்லாம் நன்ருய்ப் பொருந்தும்.

சேலம் கோ ஆபரேடிவ் பாங்குகளுக்கு ஆண்டு நிறைவு

இது முதன் முதல் கூடும் பெருங்கூட்டமாதலால், பிரதிநிதிகள் மட்டும் போசாதென்று, வேறு இடங்களிலிருந்தும் இதுவிஷயத்தில் சிரத்தையுள்ள ஸ்ரீமான்களை வரவழைத்திருந்தார்கள். பெங்களூரிலிருந்து மைசூர் சர்க்கார் ரிஜிஸ்திராரவர்களும், சென்னபட்டணத்திலிருந்து கனவான்களும், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்து சிலரும் வந்து கூடினுர்கள். கனம் ஜட்ஜி வி. கிருஷ்ண சுவாமி அய்யரவர்கள் சபாநாயகராக இருந்து, இரண்டுமணிநேரம் இந்தியாவில் கோஆபரேஷன் வரன்முறையையும், அதனுல் கிராமத்தவர், நகரத்தவர், வியாபாரிகள், குடித்தனக்காரர், தொழிலாளிகள், ஏழைகள் முதலிய சகலருக்கும் உண்டாகிவரும் நன்மையையும், உண்டாகக்கூடிய நன்மைகளையும், விளக்கி இங்கிலீஷிலும் தமிழிலும் பிரசங்கித்தார். இவரன்றி வந்தவர்களில் 14-பெயர் ஒரோரம்சத்தை விவரித்துப் பேசினுர்கள். அனேகமாய் இந்தச் சபையில் தமிழே வழங்கி வந்தது ஒருபெரிய விசேஷம்.

சேலம் ஜில்லாவில் இரண்டொரு வருஷத்திற்குள் இந்த முறையில் காரியம் இவ்வளவு தூரம் பிரபலித்ததையும், அதற்குக்காரணராகி அல்லும் பகலும் உழைத்துவரும் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாருடைய தரும சிந்தையையும் எல்லோரும் புகழ்ந்தார்கள். வந்தவர்களை யெல்லாம் வேண்டியபடி யுபசரித்து அனுப்புவதற்காக ஏற்பட்ட கம்மிட்டியார்களும், அவர்களுக்கு அக்கிராசனுதிபதியான, ஸ்ரீமான்-நரசிம்ம அய்யரவர்களும், தங்களைப் பொறுத்தமட்டில் குறைவொன்றுமில்லாமல் நடத்தியதற்காக, எல்லோரும் வந்தனமளித்தார்கள்.

முக்கியமாக இந்த விஷயத்தில் ஒருவருக்காவது சுய நன்மை விசேஷமில்லாததுபற்றி இது ஏழைகளை உத்தாரஞ் செய்வதற்கென்றே ஏற்பட்ட தோர் சாதனமாம். இதில் தேசப் பிரயாசை, பணச்செலவு, இவைகளைக் கவனியாமல், இவ்வளவுதூரம் எல்லோரும் ஏகோபித்துக்காரியம் நடத்தியது இந்த ஸ்ரீமான்களு

க்கு எவ்வளவோ புண்ணியகரமென்பதுடன், தேசத்திற்கும் நற்குறியென்று நாம் தைரியமாகச்சொல்லலாம். இவ்விஷயம் நன்றாய் விளங்க வேண்டியே 'மார்னிங்கு போஸ்டு' என்னும் பத்திரிகையிலிருந்து ஒரு வியாஸத்தைச் சுருக்கிக் கீழே யெழுதியிருக்கிறோம். இனியும் வரும்.

எட்டி பழுத்தது

'விஹாரிணி' இரண்டு, மூன்றாவது நெம்பர்களில், 'எட்டிக்கொட்டை' அவர்கள் நமது தேசீயச் சரக்குகளை வைத்தியத்திற்கு உதவும்படி இத்தேசத்திலேயே பக்குவப் படுத்த வேண்டுமென்று தக்க யுக்திகளுடன் நிரூபித்தார்களென்பது அபிமானிகளுக்கு ஞாபகமிருக்கலாம். அவர் இதை எழுதி நாலுமாசந்தான் ஆகிறது. இதற்குள் வெகு நாளாகத் தூங்கிக் கொண்டிருந்த இந்த விஷயம் ஜாரிக்கு வந்திருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். 'பிரிட்டிஷ் வைத்திய ரத்னாகரம்' என்னும் கிரந்தத்தின் 1900-௵த்திய பதிப்புக்கு அனுபந்தமாக 'இந்திய வைத்தியக் கொத்து' ஒன்று சேர்க்கப்பட்டதில், அதில் காணும் யோசனைகளை அனுசரித்து, இனிமேல், குப்பைமேனி, ஆடாதோடை, நிலவேம்பு, மரமஞ்சள், சீந்தில், மிளகரணை, ஓமம், எழிலைப்பாகல், வேம்பு, எருக்கு முதலிய தேசீயப் பச்சிலைகளிலிருந்து 'புளி' சத்துகள் இறக்குவதற்கு, ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் சௌகரியம் செய்யப்போவதாகவும், அந்தச்சத்துக்களை ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர் மூலமாகவே கிரமப்படி தயார்செய்து உபயோகப்படுத்தப் போவதாகவும் சமாசாரம்.

இதைக்கேட்கவே நமக்கு வெகு சந்தோஷமுண்டாகிறது. சுமார் ஐம்பது வருஷகாலமாக அப்போதைப்போது பேச்சுமாத்திரமிருந்து வந்தும், காரியத்தில் ஒன்றும் காணாமலிருந்த இந்தப் பெரிய விஷயம் இப்போது செய்கைக்கு ஏதோ ஒரு வகையாக வந்திருப்பதைக்கேட்க யாருக்குத்தான் களிப்பு இராது? இந்தமுறை இங்குப் பலித்தால் அதனால் இத்தேசத்திற்கும், இதர தேசங்களுக்கும் கிடைக்கக்கூடிய பலன்களை முன்னமே அபிமானிகள் அறிந்திருப்பதால், அவைகளை மறுபடி பேசவேண்டியதில்லை. மொத்தத்தில் கவர்ன்மெண்டு முறையாக ஆரம்பமானது நமக்குச் சந்தோஷமென்றாலும், அது அத்துடன் நில்லாமல், 'எட்டிக்கொட்டை' யவர்கள் இஷ்டப்படி, நம்மில் யோக்கியதையும், திரவியசகாயமும் இருப்பவர்களில் சிலர் இதைத்தொழிலாக ஆரம்பித்துத் தங்களுக்கும் இதரருக்கும் நன்மையை நாடுவாராக. 'எட்டிக்கொட்டை' அவர்கள் டாக்டர் ஸ்ரீமான் நஞ்சுண்டராயரை உதகரித்துப் பேசினார். அந்த மகானும் ஏதோகாரணம் பற்றி வேலையை ராஜிவைத்து விட்டிருப்பதால், இது நல்ல முகூர்த்தமென்று காணுகிறது. அவரே இதை ஆரம்பிக்கலாம். ஈசுவரானுக்கிரகமும் பூரணமாயிருக்கு மென்றே நம்புகிறோம்.

பள்ளிக்கூடச் சம்பள விகிதம்

சென்ற௴ மதிராசு ஹிந்து ஐஸ்கூலில் மாணாக்கருக்குப் பரிசளிக்கும் சந்தர்ப்பத்தில் சபா நாயகராக இருந்த கனம் ஜட்ஜி வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் நமது இங்கிலீஷ் பாடசாலைகளில் பிரைமெரி தரபு ஒழிய மற்றுள்ள உயர்ந்த தரபுகளிலெல்லாம் மாணாக்கர் கொடுக்கும் சம்பள விகிதங்களை உயர்த்தவேண்டுமென்று இப்போது டிபார்ட்மெண்டார் யோசித்திருப்பதைக் குறித்துப் பேசியது நமக்கும் சம்மதமாதலால் இங்கு விவரிக்கிறோம். இப்பொழுதிருக்கிறபடி 'சகண்டரி தரபில் ஆகும் செலவிற்கு நூற்றில் அறுபத்தெட்டுவீதம் மாணாக்கர் தரும் சம்பளத்தினால் கட்டி வருகிறது. மீதி தான் சர்க்கார் வகையில் வரவேண்டும். அதாவது, சர்க்கார் மூன்றிலொருபங்கு உதவ



அன்னி பிஜாண்டு அம்மாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2 - JUL 1910 MADRAS.

வேண்டும். இது சரியென்றே நமக்குக் காணுகிறது. தவிர, இப்போது நமூனுவில் காணும் ரேட்டுகளே பூராவாக வசூல் ஆவதில்லை. 100-க்கு 85-வீதமே வசூலாவது. ஆதலால் சம்பளத்தை உயர்த்துவதற்கு இது நன்முகூர்த்தமன்று. இருக்கிற ரேட்டுப்படி பூராவும் சலீசாக வசூலாகுமானல், இன்னும் அதிகமாக்குவதைப் பற்றி யோசிப்பது திறம். சர்க்காருடைய அவசரம் பலவிதமிருக்கலாம். சர்க்காருக்குப் பிரைமெரிதரபில் செலவு வெகு அதிகமாகப் பெருகும். அதற்குப்பணம் வேண்டும். வேறு அனேகபாபத்துக்களில் பணம் வேண்டியிருக்கலாம். அதெல்லாம் வாஸ்தவம். ஆனல் செகண்டரி தரபுக்குப் பணம் குறைப்பதனல் உண்டாகக்கூடிய லாபநஷ்டங்களையும் அவர்கள் கவனிக்க வேண்டும். இருக்கிற ரேட்டுப்படி வசூலாகாததற்கு ஜனங்களுடைய வறுமை காரணமென்று சர்க்காரே ஒப்புக்கொண்டு, உடனே அந்த ரேட்டுகளை உயர்த்துவது சரியன்று. சர்க்காருக்கோ மகா ஜனங்களுக்குள் எல்லா தரபிலும் வித்தை பிரபலிக்க வேண்டுமென்று ஆக்கிரகமேயொழியக்குறைய வேண்டு மென்றில்லை. ஸ்கூல்கள், காலேஜுகள், இவைகளைச் சீர்திருத்தி, நல்ல கட்டிடங்கள், நல்ல தட்டுமுட்டுகள், நல்ல உபாத்தியாயர், இவைகளைத் தேடிவருவதனல், டிபார்ட்மெண்டாருக்கு மகாஜனக் கல்வி விஷயத்திலுள்ள சிரத்தை பிரத்தியக்ஷம். ஆதலால், சம்பளவிஷயத்தில் இவர்களுக்கும் மற்ற கக்ஷியாருக்கும் அபிப்பிராயம் பேதித்தால், சங்கதியைத் தீரவிசாரித்தறியப் பிரயத்தனம் நடக்க வேண்டுமென்பது வியக்தமாகிறது. சட்ட நிரூபணசபையில் இந்தச்சமாசாரம் வியவகரிக்கவேண்டி வருகையில், மேற்சொல்லிய விஷயங்களையும், செகண்டரி தரபில் மாணுக்கர் ங்கியை அதிகரிக்காமலிருப்பதையும், நன்ருக யோசித்துப் பிறகு யுக்தம்போல் செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்ருர். இவ்வாறு இவரும், பிற்பட்டுச் சட்ட நிரூபண சபை மீட்டிங்கில் வேறு அனேக கனவான்களும், பேசினர்கள் என்ருலும், சர்க்கார் இது விஷயத்தில் பிடிவாதமாகவே யிருப்பதாகத் தெரிகிறது.

**ஒட்டு வேண்டும் ஆங்கிலேய ஸ்தீரீயும் இந்தியாவும்**

'விஹாரிணியில்' இரண்டொருமுறை நாம் இந்த ஸ்திரீகளுடைய லக்ஷியத்தையும் அதை யடைவதற்காக அவர்கள் செய்துவருங் காரியங்களையும் குறிப்பிட்டிருக்கிருே மல்லவா? இப்போது சென்ற மாதம் "மாடர்ன் ரிவியூ" சஞ்சிகையில், இவர்களில் ஒரு ஸ்ரீமதி இந்தியாவுக்குவந்து இவ்விடத்திய ஸ்ரீமதிகளையும், அவர்களுடைய நடவடிக்கைகளையும் பார்த்துவிட்டு ஏதோ தன் மனதிற்பட்டதை யெழுதுகிருள். இந்தியாவில் சேது முதல் ஹிமாசலம்வரை போய்ப்பார்த்ததில், தன் மனதில் எண்ணியிருந்தப்படியே தான் எல்லாம் அற்புதமாக இந்த அம்மாளுக்குக் கண்டது. மலைகளும், நதிகளும், பிரம்மாண்டமாகக் கண்டது. கோயில் குளங்களும்அப்படியே. கல்தச்சர், தட்டார் முதலிய சிற்பிகளும், அவர்களுடைய வேலைத்திறமும் இன்னும் விசேஷமாக நசித்துப்போகாமலேயிருக்கின்றன. இந்த அம்மாளுக்கு இந்தியரனேகரை இங்கிலாந்திலேயே பார்த்துப் பழக்கமாதலால், இங்கு வந்ததில், அவர்களுடைய குடும்பத்தவரையும் பார்த்துப் பேசி, அவர்களுடனிருக்கச் சௌகரியமுண்டாயிற்று. இந்தியர் நடவடிக்கைகளைத் தானே பார்த்தறிவதற்கு நல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஆதலால் ஸ்ரீமதி சொல்லுவதை நாம் நன்ருய்க் கேட்கவேண்டும். இவர் சொல்லுவதில் நாலைந்து முக்கிய அம்சங்கள் நமது ஸ்திரீகளுக்கு விநோதமாகக் காணும். இந்தியாவென்பது புருஷருடைய நாடு. ஸ்திரீகளுக்கு

வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டிய காரிய மே இல்லை போலும். கடைத்தெருவில், கடைக் காரர், தட்டார், கன்னர், முதலிய சகலரும், அவரவர் வேலைகளையும் செய்துகொண்டு, போகிறவர் வருபவருடன் சம்பாஷணையும் செய்துகொண்டு உல்லாசமாயிருக்கிறார்கள். அதெல்லாம் சரிதான். ஆனால் பெண்டுகளெங்கே? அவர்களுக்கு இவ்விடத்தில் ஒரு காரியமுமில்லையாவென்று கேட்கவேண்டி வருகிறதாம். பெரிய பட்டணங்களில் போனால், வித்தியா சாலைகள் அனேகம் காணுகின்றன. மலைமலையாகக்கட்டடம், அனேகம் உபாத்தியாயர்கள்' உயர்தரப் படிப்பேறிய மாணுக்கர், இவர்கள் வேண்டுமட்டு மிருந்தாலும், இவையெல்லாம் ஆண்பிள்ளைகளுக்கே தவிர ஸ்திரீகளுக்கு ஒன்று மில்லையென்று தோன்றுகிறதாம். இவ்விடத்திலுள்ளவர்கள், பெண்களுக்கும் புத்தியுண்டென்பதை மறந்து விட்டதாகக் காணுகிறதாம். அது மட்டுமேயல்ல, அவர்களுக்குத் தேகப்பயிற்சி, நல்லகாற்று முதலியவைகளும் அனுவசியமாகிவிட்டது போலிருக்கிறது. ஆதலால், அவர்களுக்குப் புத்திமட்டுமே யன்றி, தேகமும் இல்லையென்று புருஷர் எண்ணி விட்டதாகக் காணுகிறதாம். அவர்களுக்கு மாத்திரம் அன்று, அவர்களுடைய குழந்தைகளுக்கும் அப்படியேதான். ஊரைவிட்டு வெளியே ஏதோ உற்சவம் நடக்கிறது. அதற்குப் போய் வருபவரும் புருஷரே. வீட்டில் வேலைக்காரரும் புருஷரே. இங்கிலாந்தில், எலிமெண்டரி தரபுவரையும் அதிகமாகவும் பாடம் சொல்லுவது, ராஜாங்க விஷயத்தில் உழைப்பது, தருமகர்த்தர்களாகித் தருமகாரியங்களைப் பரிபாலனம் செய்துவருவது, ஆசாரங்களை விமரிசையாக்குவது, முதலிய காரியங்களுக் கெல்லாம் ஸ்திரீகளே முகாமையாயிருப்பதைப் பார்த்த கண்ணுக்கு, இத்தேசத்தில் ஸ்திரீயென்பவள் இவ்விஷயங்களி லுழைக்க 'மருந்துக்குக்' கூட அகப்படுவதில்லை யென்பது பெருத்த அநியாயமாகக் காணுகிறதாம். விசாரித்ததில், இந்தியாவில் ஆண்மக்கள் பிரபஞ்சம் வேறு, ஸ்திரீகளுடைய பிரபஞ்சம் வேறு, என்றும், ஆண்மக்கள், எவ்வளவு நாகரீகமடைந்திருந்தாலும், தமது தாய்மார், சகோதரிகள், பெண்டுகள், ஆகிய இவர்களைச் சமான ஸ்கந்தமாக வைத்து நடத்துவதில்லையென்றும், தெரிந்ததாம். இந்த அநியாயம் இங்கிலாந்து சென்று பரீக்ஷையில் நன்றாகத் தேறி வந்திருக்கும் சமர்த்தருடைய பெண்டுகள் விஷயத்திலும் நடப்பதால், வேறு ஜனங்களுக்குக் கேட்கவேண்டியதில்லை. 'தியாஸபி' வர்க்கத்தில், ஸ்ரீமதிகள் பிளாவட்ஸ்கி அம்மாள், அன்னிபிஜாண்டு அம்மாள் இருவரும் பெண்டுகளென்று, அவ்வருக்கத்தாருக்குத் தெரியும். என்றாலும், காசிப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்களும் கொஞ்சம். அவர்களையும் வெளியில் காண்பது அரிதாம். இந்த ஸ்ரீமதிக்கு எல்லாவற்றிலும் அதிசயமாகக் காணுவது எதுவென்றால், ஸ்திரீகளுக்குக் கல்வி முதலிய அவசிய சாதனங்கள் இருக்கத்தான் வேண்டுமென்றும், படுதா முதலிய உபத்திரவங்கள் போகத்தான் வேண்டுமென்றும், அவையொன்றும் சாஸ்திரமல்லவென்றும், எல்லாப் புருஷர்களும் ஒத்துக்கொண்டாலும், காரியத்தில் ஒன்றும் காணுவதில்லை யென்பதாம். இப்படிப் பெண்டுகள் விஷயத்தில் ஒன்றும் செய்யாமலிருக்கும் புருஷர்கள், தங்கள் ராஜாங்கத்தைச் சீர்ப்படுத்துவதற்காகவும், அதில் உன்னத பதவி பெறுவதற்காகவும், ஆசாரங்களைச் சீர்படுத்துவதற்காகவும், பேசுவது வியர்த்தமென்று இப்பெருமாட்டிக்குக் காணுகிறதாம்.

ஸ்திரீகள் பெரிய சபைகளில் வந்து நின்று கல்லெறிந்து விளையாடுவது, முக்கிய மந்திரிகளுடன் ரயில்வே ஸ்டேஷனில் மார்கட்டி யுத்



சத்திரபதி ஆற்காட் நவாப் பஹதூர்

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 2-JUL 1910 MADRAS.

தம் செய்வது, முதலிய விசித்திரங்களைப்பற்றி இந்த அம்மாள் ஒன்றும் சொல்லவில்லையென்று சிலர் நினைக்கலாம். ஆனல் அதைக்கொண்டு பிரகிருதத்திற்கு ஒன்றும் ஆகவேண்டிய தில்லை.

மகம்மதீயக் கல்வியபி விர்த்தி சங்கம்.

தென்னிந்தியா மகம்மதியருக்குள் கல்வி பரவ வேண்டி யுழைக்கும் இச்சங்கம் சென்ற மாசம் திருச்சிராப்பள்ளியில் கூடி வருஷோற்சவம் கொண்டாடிற்று. சத்திரபதி ஆர்காட் நவாப் பஹதூர் வப்சத்தலைவர் அக்கிராசனதிபதியாகி விஷயத்தை நன்கு விளக்கி இந்துஸ்தானியில் அழுத்தமாகவும், திருத்தமாகவும் பேசினர். மகம்மதீயர் ராஜதானியெங்கும் சிதறியிருப்பதால் அவர்களுக்குள் கல்விபரவவில்லை யென்றும், ஆங்காங்குச் சிறு பள்ளிக்கூடங்கள் உண்டாகிச் செழிப்பதுடன், வடக்கேயுள்ளபடி இங்கும் பெரிய பாடசாலையொன்று ஏற்படவேண்டு மென்றும், மகம்மதியமதம், ஆசாரம் இவைகளைக் கற்பிக்கவும், தொழில் விஷயமாகப் படிப்பு அதிகரிக்கவும் சாதனங்களமைய வேண்டுமென்று இவர் வெகுதூரம் வற்புறுத்தினர். இவைகளுக்கெல்லாம் திரவியமும் முயற்சியும் அவசியமாதலாலும், குரானில் கல்வியைப்பரவச் செய்வதைவிடச் சிறந்ததருமமில்லையென்றுஹஜரத்நபி அவர்கள் சொல்லியிருப்பதால்அங்கங்குள்ள மகம்மதியர்கள் முயன்று, திரவியசகாயமும் செய்து தங்களுடைய வர்க்கத்தவரைப்பிரபலத்திற்குக் கொண்டுவரவேண்டு மென்றும் சொல்லி முடித்தார். காரியாம்சத்தில் திருச்சிராப்பள்ளியிலுள்ள கல்விச் சாலைகள் இரண்டொன்றிற்குத் திரவிய சகாயம் கிடைத்தது. வாணிபம்பாடியில் பலமாகப் பிரயத்தனம் நடப்பதை யெல்லோரும் புகழ்ந்தார்கள்.

மகம்மதியருக்குள்ள குறைவெல்லாம் கல்வியைப் பொறுத்த தாகையால், இம்மாதிரி ஆங்காங்குள்ள கனதனவான்கள் அக்கரைப் பட்டுப் பணத்தைப்போட்டு வேலை யாரம்பித்து விட்டால், காலக்கிரமத்தில் எல்லாமங்களமும் கிடைக்கும். இதர ஜனங்களுடன் மாச்சரியத்திற்கு இடமில்லாமல் நடக்கும் எக்காரியமும் நற்காரியமென்றே தான் நமக்குக் காணுகிறது. இப்போது கண்டுவரும் துர்லக்ஷணங்களுக் கெல்லாம் அறிவின்மையே மூல காரணமாம்.

தான்னிய கோளங்கள்

பஞ்சாபிலும், யூனைடெட் மாகாணங்களிலும் தான்னிய கோளங்கள் என்னும் பாங்கு வகைகள் இருப்பதாக முந்திச் சொன்னோமல்லவா? அவைகள் நன்ருய்த் தழைப்பதில்லையென்றும், ஏதோ கொஞ்சம் உயிரிருப்பவைகள் சீக்கிரத்தில் நாணய பாங்குகளாகிவிடுகின்றனவென்றும் வதந்தி. என்ருலும் மதிராசு கவர்ன்மெண்டார் நமது பிராந்தத்தில் இவ்விஷயத்தில் என்ன ஆகக்கூடு மென்று பார்க்கும்படி ரிஜிஸ்திராரை நியோகித்திருக்கிருர்கள். கிராமங்களில் தான்னியங்களைச் சேகரித்து நிதியாக வைப்பதில் அனேக நன்மைகளுண்டு. நன்ருக விளைந்த காலத்தில் குடியானவர்கள் மீத்துவைத்துக் கொண்டு, சிரமதசையில் தங்களுக்குள் வேண்டுபவருக்குமட்டும் லேவாதேவி செய்தால், சாவுகார் எங்குமற்றுப் போகிருர். சுபிக்ஷ காலத்திலும் மாசூல் கைக்குவருமுன் தான்னியம் வேண்டியவர்கள் சுலபமாகப் பெறுகிருர்கள். வியாதியஸ்தர் முதலியோருக்குப் பழைய தான்னியம் தாராளமாய்க் கிடைக்கிறது. மேனாட்டில் ஸ்பானியா, இத்தாலியா முதலிய இடங்களில் இம்மாதிரிப் பாங்குகள் இருந்து செழித்துவருகின்றன. முன்னளில் நமது நாட்டிலும், 'குழிகள்' யதேஷ்டமாகி யிருந்தன. 'கம்பங்குழி,' 'சோளக்குழி' முதலியவை இன்னும் சில இடங்களிலிருப்பது மெய்யா

னாலும், அது பாங்கு சம்பிரதாயத்திலில்லே. அவைகள் தழைக்கு மளவிற்கு க்ஷாம காலத்தில் கவர்ன்மெண்டுக்கும், ஜமீன்தாரருக்கும், சிரமம் குறையும். ஜனங்களுக்கும் பரோபகார சிந்தைவளரும். க்ஷாமகாலத்தில் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குத் தான்னியம் கொண்டு சேர்க்கவேண்டிய அவசரமும் குறையும். ரிஜிஸ்திரார் என்ன செய்வாரோ பார்க்கவேண்டும்.

கோல்லம்பிர் மசுவருபிணி கேஸ்

இதைப் பற்றி முன்னமே கொஞ்சம் சொன்னேமல்லவா? இப்போது எல்லாம் வெளியாகி விட்டது. சுமுகம் அய்யர் துர்முகம் அய்யராக ஆகிவிட்டார். போஸ்டு மேஸ்டர், சூபரிண்டாண்டு இருவரையும் நெல்லூருக்கு மாற்றிவிட்டார்கள். பிர்மசுவரூபிணீ குருவும், அவர் சிஷ்ய ஜனங்களும் சேர்ந்து சென்ற ஒரு வருஷத்திற் கதிகமாகவே ஆடிய திருவிளையாடல்கள் எல்லாவற்றையும், மாஜிஸ்திரேட்டு வாக்குமூலமாகவும், கடிதமூலமாகவும் விசாரித்துத் தீர்மானம் எழுதுவதில் எடுத்து விவரித்திருக்கிறார். சூபரிண்டாண்டு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசராயர் வெகு புத்திமான். அவர் இப்படி யேமாந்து, ஒரு முட்டாள் கையிலகப்பட்டுத் தன் சம்பாத்தியத்தையெல்லாம் இழந்து, மானத்தை யுமிழந்தது, ஈசுவர லீலையின் மகிமையென்று தான் சொல்லவேண்டும்.

நடந்த சங்கதி சுருக்கமாக இதுதான். 'சுமுகம்' என்பவர் கிருகஸ்தமார்க்கமாக ஜீவிக்க முடியாமல், கடன் தகாதாவில் அகப்பட்டு வருத்தப்பட்டார். என்ன செய்வதென்று யோசித்ததில், 'அம்பாள்' பிரமசுவரூபிணியாகப் பிரசன்னமாகி அவருக்கு மந்திரோபதேசம் செய்தாள். இப்படி எத்தனையோ முறை இதற்குமுன் நடந்து தானிருக்கிறது. அதைக்கொண்டு யாராகிலும் 'கொழுத்த ஜந்துவை'ப்பிடித்து அவரிடத்தில் உள்ளதைக் கவர யத்தனித்தார். முதன் முதல் பட்டணத்தில் ஸ்ரீமான் லாட்கோவிந்த தாஸ் ஜீ அவர்களை வலைபோட்டுப்பார்த்தார். ஆனால் ஈசுவரகிருபையால் அவர் தப்பித்துக்கொண்டார். பிறகு திருவனந்தபுரம் போய், அவ்விடத்திலும், கொல்லத்திலும் மனுஷ்ய ரூபத்துடன் சஞ்சரிக்கிற சில பசுக்களை, ஆண்பெண் சகிதம் பிடித்தார். இந்தக் குருவுக்குச் சிஷ்யர்களைவிடச் சிஷ்யைகள் விஷயத்தில் தான் சிரத்தை அதிகம். தினப் பிரதி இவர்கள் கூடுவதும், குருகையால் 'ஆனந்தரஸம்' வாங்கிக் குடிப்பதும், பிறகு அந்த ரஸ வேகத்தினால் எல்லோருக்கும் ஏகாக்கிரசித்தம் உண்டாகி, மனதை உட்புறமாகத் திருப்பி, ஆசனமிட்டு உட்கார்ந்து, ததேகத்தியானமாக 'அம்பாளை'க்குறித்துத் தபசு செய்வதும் வழக்கமாம். இச்சமயங்களில் குருமட்டும் சிஷ்யைகள் விஷயத்தில் தனக்கிருந்த விசேஷ கிருபையைப் பலவிதமாக வெளியாக்கி வந்தாரென்று ஒரு சிஷ்யை வாக்குமூலத்தில் சொல்லுகிறாள், கடைசியாக, சிஷ்யைகளில் இருவரைத் துணைகூட்டிக்கொண்டு, மதிராசு போய், மேல் நடக்கவேண்டியதை நடத்தக் குரு சுவாமிகள் புறப்பட்டதில்தான் புகார் உண்டாகி இந்த விசாரணை யேற்பட்டு, குரு சுவாமிகளுக்கு நன்னடக்கை ஜாமீன் விழுந்தது.

ஓ இஷ்டமித்திரர்களே, இந்தக் கதை புதிதல்ல. உலகமாரம்பமானபின் எத்தனையோ பெயர் இவ்வாறு வேஷம் போட்டுச் சிலகாலம் கூத்தாடி மறைந்திருக்கிறார்கள். என்றாலும் ஜனங்களுக்குள் அதிபுத்திசாலிகளிலும் ஏமாளிகள் அனேகர், இருந்தேவருகிறார்கள் ஆனால் இதற்கெல்லாம் மூலகாரணம் தனமேயாம். அதில்லாதவர்களை யாரும் ஏமாற்ற வருவதில்லை.

ஞானமார்க்கமோ, பக்திமார்க்கமோ, கரும

மார்க்கமோ, எதாகிலும் சரி, சாமான்னிய தருமத்திற்கு விரோதமின்றி யிருக்கவேண்டும். ரகசியமென்று யார் யார் பேசிவந்திருக்கிறார்களோ, அதெல்லாம் கடைசியில் 'குதிரைமுட்டைக்' கதையாகவே முடிந்திருக்கிறது. ஆதலால், ஓ ஜீவர்களே, நீங்கள் இவ்வுலகிலாகிலும் சரி, மறுவுலகிலாகிலும் சரி, நற்கதி வேண்டுவீர்களானால், ரகசியத்தை வேண்டாது, சற்குருவை வழிபட்டு, சன்மார்க்கம் கடினமாயிருந்தாலும், அதையே யனுசரித்து முன்னுக்கு வாருங்கள். அம்பாளுடைய கிருபை பூரணமாக விருக்கும். சந்தேகமில்லை.

சாமான்னிய தருமமென்பது என்ன? உண்மை பேசுவதும், நன்னெறியில் பொருளீட்டுவதும், அதைச் சற்பாத்திரத்தில் விநியோகம் செய்வதும், ஒருவரையும் உபத்திரவிக்காமல், கூடிய மட்டில் நாலு பெயருக்கு உபகாரமாயிருந்து போவதாம். இதுதான் சமுசார சுவரத்திற்குக் கைகண்ட ஔஷதம். ஆனால் இது 'புரைக்கடைக் கீரையாதலால்,' சில கொழுத்த ஜனங்களுக்கு இது மருந்தாவதில்லை. புது மருந்தும், புதுப்பத்தியமும் வேண்டுகிறார்கள். பசுவைப் பால் கறந்து கைசலித்துப்போகிறது. புதுமைக்காக எருத்தைக் கறக்கப்போகிறார்கள். பலன் கைமேல் கிடைக்கிறது. ஈசுவரமாயை அனுதியாதலால், பிரமையென்னும் சக்கரம் உருண்டு கொண்டே வருகிறது. விளக்கைப் பிடித்துக் கொண்டு, இரண்டு கண்களையும் திறந்து கொண்டே கிணற்றில் விழுகிறார்கள். ஏனெனில் கொழுத்தவர்களுக்கு அதுதான் ரஸமாகக் காணுகிறது.

—

## பரோபகாரம்—ஸ்திரீகளின் கடமை

ஸ்ரீமதி சிவகாமி யம்மாள்

முன்னொரு சஞ்சிகையில் கல்வியினால் புத்தி விசாலமாகிறதென்றும் அந்தப் புத்தி விசாலத்தால் பரோபகாரச் சிந்தை உண்டாகிறதென்றும் விஸ்தரித்திருந்தது. இவ்விதமாகப் பிறர் நன்மைக்காக இந்தியாதேசத்தில் பாடுபடுகிற சில ஸ்ரீமதிகளைப் பற்றி எனக்குத் தெரிந்தமட்டும் கொஞ்சம் இச்சமயத்தில் சொல்லுகிறேன்.

முதலாவது, மிஸ்ஸஸ் அன்னி பெசண்டு என்னும் ஆங்கிலேய மாது சிரோன்மணியைப் பற்றிக் கேட்காதவரில்லை. இந்த அம்மை முதலில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். அந்த மதத்தில் நம்பிக்கை இல்லாமல் ஏறக்குறைய 20-வருஷகாலம் நாஸ்திகராயிருந்தார். என்றாலும் அக்காலத்திலும் சார்லஸ் பிராட்லா என்பவருடன் சேர்ந்து இங்கிலாண்டில் ஏழைஜனங்களுக்காக அதிகமாக உழைத்து வந்தார். அப்புறம் நாஸ்திக மதத்தினால் மனதுக்குச்சமாதானம் உண்டாகாமல், இந்து மதத்தைக்கற்று அதில் பற்றுண்டாகி சென்னை அடையாரில் ஸ்தாபித்திருக்கும் தியாஸோபிகல் ஸொஸைடியை (பிர்ம்மஞான சபையைச்) சேர்ந்து இந்தியாவின் ஜனங்களுக்காகச் சென்ற சுமார் 20-வருஷங்களாக உழைத்து வருகிறார்.

இந்தியாவில் முதல் முதல் இங்கிலீஷ் கலாசாலைகளில் படித்தவர்களும், முக்கியமாய் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களில் வித்தியாப்பியாசம் பெற்றவர்களும், தங்கள் புராதன ஆரிய மதத்தில், சிரத்தை குறைந்தவர்களாய், ஏறக்குறைய நாஸ்திகர்களாகவே அநேகம் பேர்களிருந்தார்க ளென்று சொல்லலாம். பிறகு காலக்கிரமத்தில் கர்னல் ஆல்காட், மாடாம் பிளாவெட்ஸ்கி என்னும் பெரியோர்கள் ஸ்தாபித்த தியாஸபிஸௌஸைட்டியில் அநே

கம் இந்துக்கள் மெம்பர்களாகி ஏதோ ஒருவாருக மதப்பற்றுள்ளவரானுர்கள். ஆனல் மிஸ்ஸஸ் பெசண்ட் அம்மாளுடைய பூர்வ விருத்தாந்தமும், அதிசாதுரியமான பிரசங்கங்களும் கூடி, நாஸ்திகர் ஆகிக்கொண்டும் ஆகக்கூடியவும் இருந்த அநேக இந்துக்களைத்தங்கள் மதத்தைக்கவனிக்கும்படி தூண்டின. இப்பொழுது நம்மவரில் அனேகர் புராதனமான ஆரிய மதத்தில் குருட்டு நம்பிக்கை விலகி ஆங்கிலேயர் சாஸ்திரப்படி ஆராய்ச்சி செய்து திட நம்பிக்கை கொண்டவர்களா யிருக்கிருர்கள்.

இந்த அம்மை இந்தியாவிற்கு வந்து பாடுபட ஆரம்பித்ததின் பிறகு சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்ட நமது சாஸ்திரங்களை ஆங்கிலம் கற்றவர்கள் கவனமாய்ப் படித்துவருகிருர்கள். இந்த அம்மையினுடைய செல்வாக்கினுலும், சாமர்த்தியத்தினுலும் ஸ்ரீகாசியில் ஒரு ஹிந்துகாலேஜ் ஸ்தாபிக்கப்பட்டு வெகு விமரிசையாய் நடக்கிறது. இதில் பாலர் வகுப்புமுதல் எம். ஏ. பரீக்ஷை வரைக்கும் மற்ற கலாசாலைகளைப் போல் கல்வி கற்றுக் கொடுப்பதுடன், சனுதன தருமத்திற்குரிய மத சம்பந்தமான பாடங்களும் நடக்கின்றன. ஐரோப்பிய மாதாவா யிருந்தாலும் இந்தியர்கள் க்ஷேமத்தைக் கருதி இந்த அம்மாள் பாடு படுகிறவிதமாய் இந்தியர்களில் ஒருவராவது சிரத்தை யெடுத்துக்கொண்டதாக இல்லை. மற்றநாகரீக தேசங்களைப்போல் இந்தியாவும் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமாஞல் பெண்கல்வி தான் அதற்கு முக்கியமான சாதனமென்று இவர் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லியிருக்கிருர். ஸ்ரீகாசி காலேஜில், கல்லியாணம் ஆகியிருக்கும் பையன்களைக் கீழ்வகுப்பில் சேர்ப்பதே இல்லை. மேல் வகுப்புப் பையன்களில் விவாகமானவர்களுக்கு இரட்டைச் சம்பளம் விதித்திருக்கிறது. இதனல் பாலிய விவாஹத்தை நிறுத்த வேண்டுமென்பது அவருடைய முக்கியகருத்து. இந்த அம்மாளை இப்போது இந்தியாவின் க்ஷேமத்திற்காகவும் பரோபகாரத்திற்காகவும் பாடு பட்டுழைக்கும் ஸ்ரீமதிகளில் முதல் பதவி பெற்றவர் என்று சொல்லலாம்.

ஆங்கிலேய ஸ்திரீகளில் கிறிஸ்தவ மிஷினரி ஸ்திரீகள் கிறிஸ்து மதத்தில் நம்பிக்கைகொண்டவர்களாய் கிறிஸ்துவின் பெயரை முன்னிட்டுச் சௌகரியக் குறைவுடன் இந்தியப்பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களும் வைத்தியசாலைகளும் நியமித்து யாதொரு லாபத்தையும் எதிர்பார்க்காமல் உழைத்து வருகிருர்கள். சென்னையில் ராயபுரம் மிஷனுஸ்பத்திரியிலுள்ள டாக்டர்களையும்,குண்டூர்,வேலூர்,ஜம்மலமடுகு, மதுரை,கோயமுத்தூர்முதலிய ஊர்களிலுள்ள மிஷனுஸ்பத்திரியிலுள்ள லேடி டாக்டர்களைப் பற்றிப்புகழாத ஜனங்கள் கிடையாது. பரோபகார சிந்தனைக்காகவே இவர்கள் இப்படிப் பாடுபடுகிருர்கள் என்பது என் எண்ணம். இவர்கள் கிறிஸ்து மதத்தைப் பரவச்செய்வதற்காக இவ்விதம் கஷ்டமெடுத்துக்கொள்கிருர்கள் என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்படியிருப்பதாக ஒப்புக் கொண்டாலும் அவர்கள் உழைப்பின் பலனை நாமே அனுபவிக்கிருேம். ஐரோப்பிய, அமெரிக்க மாதர்கள் உன்னதப் பரீக்ஷைகள் கொடுத்துச் சொற்ப சம்பளத்தில் தங்கள் நாட்டைவிட்டு இந்து ஸ்திரீகளுக்காகத் தரும ஆஸ்பத்திரிகள் நடத்துகிருர்களே ஒழிய, இந்து ஸ்திரீகள் தங்கள் சகோதரிகளுக்காக ஆஸ்பத்திரிகளாவது பள்ளிக்கூடங்களாவது ஏற்படுத்தி இருக்கிருர்களா ?

இப்பொழுது ஐரோப்பிய மாதர்கள் தங்கள் தேசத்தைவிட்டு அயல் நாட்டில் பாடுபடுகிற விதமாக, தங்கள் இனத்தாருக்காக உழைக்காத நம்மவர்கள் ஆப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்குப்போய் அங்குள்ள

ஜாதியாருக்கு வேலை செய்ய ஒப்புக்கொள்ளுவார்களா? பரோபகாரச் சிந்தை என்பது நம்மிடத்தில் குறைவு என்பதும் கிறிஸ்தவமிஷன் துரைசானிகளிடத்தில் அந்தச் சிந்தை அதிகமென்பதும் நாம் அறியவேண்டியது முக்கியம். நாம் அவர்களுக்கு அநேகவிதமாய்க் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் இந்தியாவில் எக்காலத்திலும் இப்படியேயிருக்கவில்லை. புத்த சன்னியாசிகளும், பரிவிராஜிகைகளும் இவ்வாறே பழைய காலத்தில் தங்கள் கஷ்ட சுகங்களை மறந்து, லங்கை, சீனா முதலிய தேசங்களுக்குப் போய் மனிதர், மிருகம் முதலிய அனைவற்றிற்கும் சுகம் தேடியுழைத்தார்களல்லவா? அந்தத் தருமசிந்தை பிற்காலத்தில் எங்கு போயிற்று? அதை மறுபடி வரவழைப்பது அவசியமா, அனாவசியமா என்று விவேகிகள் சொல்லட்டும்.

சென்னை ராஜதானியில் பிறர் நன்மை என்னும்நோக்கத்துடன் ஸ்திரீகள் ஸ்தாபித்திருக்கும் சாலைகள் கொஞ்சம் தான். அநேகமாய் இல்லை யென்றே சொல்லிவிடலாம். இதர ராஜதானிகளிலோ இவ்விஷயமாய் அநேகம் சபைகள் ஏற்பட்டு, இந்து ஸ்திரீகளுக்கு நன்மை கிடைத்து வருகின்றன. கல்கத்தாவில் பிரும ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீமதிகள் புதிய நாகரீகம் அடைந்தவர்கள். அவர்களால் அநேகம் பெண்கலாசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் முக்கியமாய் பி. ஏ. வகுப்பு வரைக்கும் கற்றுக்கொடுக்கும் போதன காலேஜு என்று ஒரு கலாசாலை வெகு காலமாய் நடந்து வருகிறது. அதில் உன்னதப் பரீக்ஷைகள் தேறின மாதர்கள் அநேகம் பேர் பரோபகாரமாய் உழைக்கிறார்கள்.

பம்பாயில் புதிதாக ஸேவாஸாதனம் என்று ஒரு சபை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பதத்திற்கு, 'ஊழியம் செய்கிறவர்கள் வீடு' என்று அர்த்தம். இதில் வேலை செய்பவர்களுக்கு, (ஸிஸ்டர்ஸ் ஆவ் மெர்ஸீ) 'கருணையுடன் பாடுபடும் சகோதரிகள்' என்று பெயர். உன்னதப் பதவியில் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்த காலஞ்சென்ற மகா தேவ கோவிந்த ரானடே என்பவருடைய மனைவியாகிய ஸ்ரீமதி ராமா பாய் ரானடே என்னும் அம்மாள் இதில் ஒரு சகோதரி. சென்ற வருஷம் திடீரென்று இறந்து போன மிஸ் கிளர்க்கு என்னும் ஐரோப்பிய பால்லியப்பெண் இந்த ஸேவஸாதனத்தில் உழைத்து வந்தவர். இவர் இப்போது பம்பாய்க் கவர்னராயிருக்கும் கனம் ஸர் ஜார்ஜு கிளார்க்கு என்பவருடைய ஒரே குமாரத்தி. இச்சகோதரிகள் கவனிக்கும் விஷயங்கள் பலவகைப்படுவன.

1. வியாதியினால் பீடிக்கப்பட்ட கோஷா ஸ்திரீகளை எவ்வளவு கீழ்ச்சாதியாக இருந்தாலும் கவனியாமல், அவர்கள் வீடுகளுக்குப் போய் அவ்வீடுகளைச் சுத்தம் செய்து அவர்களுக்கு வைத்தியம் செய்து வருவது ஒரு தருமம்.

2. ஆதரவில்லாமல் புருஷர்களால் கைவிடப்பட்ட பெண்களிற் சிலர், வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்தும், வஞ்சகர்களான சில கொடியவர்களுடைய வலைபி லகப்பட்டும், கெட்ட வழியில் இறங்கி நாசமாகிப் போகிறவர்களை, நல்ல வழிக்குத் திருப்பி மீட்பது மேற்படி சகோதரிகளின் மற்றொரு பெரிய தருமம்.

3. மதுபானம் பண்ணித் தன் வயிற்றில் பிறந்த குழந்தைகளைக் கூட லக்ஷியம் பண்ணாமல் தேகம் மறந்து, தெருவில் புரண்டு கிடக்கும் ஆண் பெண் குடியர்களையும், வெறியர்களையும் பாதுகாத்து அவர்களை நல் வழிக்குக் கொண்டு வருவது இன்னொரு தருமம்.

4. திக்கற்ற குழந்தைகளைக்கண்டுபிடித்து, அவர்களுக்கு நல்ல உணவும் உடையும் கொ

டுத்து ரக்ஷித்து, அவர்களுக்குத் தகுந்த கல்வி கற்பித்து வருவது பின்னும் ஒன்று. இவ்வித வேலைகளைச் செய்கிறவர்களில் சிலர் பணக்காரர்களாயும், பலர் ஏழைகளாயும், சிலர் இவ்வேலையுடன் குடும்பத்தை வகிக்க வேண்டியவர்களாயு மிருக்கிறார்கள். இம்மாதிரி நடக்கும் வேலைக்குப் புருஷர்களுடைய திரவிய முதலியஉதவி கொஞ்சமிருந்தாலும், சரீரத்தால் உழைப்பவர்கள் ஸ்திரீகளே. தென்னிந்தியாவில் இவ்விதச்சபை உண்டா? இல்லையென்றால், ஏனில்லை?

புனாவில் பெற்கூசன் காலேஜ் என்று ஒரு இந்து வித்தியாசாலை இருக்கின்றது. அதில் கற்பிக்கும் உபாத்தியாயர்களெல்லாம் மகா வித்துவான்கள். ஆனால் அவர்கள் எல்லாருக்கும் சொற்பச்சம்பளம். இப்போது வெகு காலமாய் ராஜப்பிரதிநிதி சபையில் முக்கிய மெம்பராயுள்ள கனம் கோபால கிருஷ்ண கோகலே என்பவர் இந்தக் காலேஜில் ஒரு உபாத்தியாராக இருந்தவர். அதே காலேஜில் (கர்வே) என்று இன்னொரு போதகர் உண்டு. இவரும் இவர் மனைவியுமாகச் சேர்ந்து இந்து விதவாகிரகம் (அநாத பாலிகாசிரமம்) ஒன்று சில வருஷங்களுக்கு முன் ஸ்தாபித்தார்கள். அதில் கற்றுத் தேறினவர்களிற் சில ஸ்ரீமதிகள் இப்போது அந்தக் கலாசாலையை நடத்தி வருகிறார்கள். ஸ்ரீமதி காசிபாய் தேவதார் என்னும் ஒரு அம்மாள் தென்னிந்தியாவில் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் பொதுவாகப் பிரசங்கங்கள் செய்து, இந்தக் கலாசாலைக்குப் பொருள் சேகரித்தது அநேகருக்கு ஞாபகத்தில் வரும். இவ்விதமே ஒருவர்மாற்றி மற்றொருவராக இந்தியா முழுவதும் பரிவிரஜனம் செய்து பொருள் சம்பாதித்துக் கலாசாலையை நடத்துகிறார்கள். சில மாதர்கள், ஆயிரம் பதினாயிரமென்று இக்கலாசாலைக்குப் பரிசு கொடுத்திருக்கிறார்கள். சில கைம்பெண்கள் தங்கள் திரவியத்தை எல்லாம் கலாசாலைக்குத் தானம் செய்து விட்டுக் கலாசாலையில் தாங்களும் உழைத்து வருகிறார்கள். இங்கே அனேகமாய்க் கைம்பெண்கள் மாத்திரம் படிக்கிறார்கள். சிலருக்கு அவர்களின் உறவினர் மாதமாதம் செலவுக்கு அனுப்புவதுண்டு. அவரவர்களுக்குத் தகுந்தபடி கல்வி கற்பிப்பதுடன், இந்துமத விஷயமாகவும் பாடங்கள் உண்டு. பம்பாய் ராஜதானியிலுள்ள அநேக ஸ்திரீகள் தங்களாலானமட்டும் திரவிய சகாயம் செய்வதுடன், தங்கள் நிலங்களிற் பயிராகும் கோதுமை, பழவர்க்கங்கள், சர்க்கரை முதலிய வஸ்துக்களைப் பரிசாக அனுப்புவதுண்டு. சிலர் புடவை ரவிக்கைகளும் அனுப்புவார்கள். வேறு சிலர் சிற்றுண்டிகள் செய்து தாங்களே கொண்டு வந்து கொடுப்பார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள பாலிய விதவைகளை இம்மாதிரி கல்வி கற்கும்படி நாம் ஏன் பிரயத்தனம் பண்ணக்கூடாது? பம்பாய் புனாவில் இருப்பவர்களும் இந்தியர்களே. அவர்களால் செய்ய முடிந்தது, சென்னைராஜதானியில்உள்ள நம்மால், முக்கியமாய்த் தமிழ்நாட்டாரால், ஏன் செய்யமுடியவில்லை? நமக்குள் ஒற்றுமை இல்லாமலும், ஜனங்களுக்குள் பரஸ்பரம் நம்பிக்கையில்லாமலுமிருப்பதுதான் நமது கடமையை நாம் நிறைவேற்றக் கூடாமலிருப்பதற்குக் காரணமாகும். இருந்தாலும் இதற்கெல்லாம் மூல காரணம் கல்விப்பயிற்சிக் குறைவேதானென்று இன்னொருதடவை வற்புறுத்திச் சொல்லலாம். அவ்விதக் கல்வி பெண்களுக்கும் புகட்டக்கூடியவர்கள் புருஷர்களாகையால் அவர்களை நாம் வேண்டிக்கொள்ளுகிறதாவது:-

பெண் கல்வியைப்பற்றி யோசித்ததும், பேசினதும், பிரசங்கங்கள் செய்ததும் போதும். அவரவர்களால் ஆனமட்டும் காரியார்த்தமாய் உதவிசெய்ய வேண்டும். பெண்பாடசாலைகள் ஸ்தாபித்தும், மாதர் சங்கங்கள் கூட்டுவித்தும், உபாத்திச்சிகளை வைத்து வீட்டில் கல்வி கற்பித்தும், இவ்விஷயங்களில் பண உதவி செய்தும், நானாவிதமாய்ப் பெண் கல்வியை விருத்தி செய்யவேண்டும். ஆனால் கற்றறிந்த புருஷனெவ்வொருவனும் தினசரி கால் மணியோ, அரைமணியோ, அல்லது அதிக நேரமோ, பிரபஞ்ச விருத்தாந்தங்களைப் பற்றித் தன் வீட்டு ஸ்திரீகளுடன் சம்பாஷிப்பது தான் இக்கல்வி அபிவிருத்திக்கு முக்கியமான சாதனம் என்று என் எண்ணம்.

## இந்தியாவில் கோஆபரேடிவ் பாங்குகள்

இந்தியா கவான்மெண்டாருடைய முயற்சியினல், சென்ற சில வருஷங்களாக இத்தேசமெங்கும் கோஆபரேடிவ் கிராமப்பாங்குகள் செழித்து வருவதும், அதனல் அனேக ஜில்லாக்களில் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன் விஷயத்தில் வட்டி விகிதம் குறைந்துவிட்டதும் இத்தேசத்தில் அனேகருக்குத் தெரியாது. என்றாலும் அது வாஸ்தவம்.

தலைமுறை தலைமுறையாக இந்தியக் குடித்தனக்காரர்கள், சாவுகார்கையிலகப்பட்டு மீட்சியேயில்லாமல் கிடந்தார்கள். ஆனல்பிரிட்டிஷ் துரைத்தன மேற்படுவதற்குமுன், இதனல் அவர்களுக்கு உபத்திரவம் அதிகமாயிருந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், அக்காலத்தில் அனேகமாய் ஒவ்வொரு கிராமமும் ஒரு சிறு சுவராச்சியமாயிருந்தது. சாவுகாரன் ஏதாகிலும் அக்கிரமம் மிதமீறிச் செய்தால், கிராமத்தார் ஒருங்குசேர்ந்து அவனுக்குத் தக்கது செய்துவிடுவார்கள். தவிரச் சர்க்கார் தீர்வை அனேகமாய் விளைபொருள்களில் ஓர் அம்சமாக விருந்ததால்,ரொக்கமாகப்பணம் குடிகளுக்கு அத்தனை அகத்தியமாகவேண்டியிருக்கவில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கம் ஏற்பட்டதும், ஜனங்கள் பதிவுபோல் தலைவிரிகோலமாக நடப்பது கட்டோடு நின்றுவிட்டது. தவிரப் போலீஸ், சட்டம், கோர்ட்டு முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றாக ஏற்பட்டு, அதனல் சாவுகாருக்குப் பலம் வெகுவாய்க் கூடிற்று. சாவுகார் என்ன அக்கிரமம் வேண்டுமானலும் செய்யவும், குடியானவனுடைய உப்புச்சட்டி, வறவோடு,முதல் சகலத்தையும் கைப்பற்றவும் இடமுண்டாயிற்று. தவிரச் சர்க்கார் தீர்வையும் பணமாகவே செலுத்த வேண்டியாயிற்று.

இந்தியக் குடித்தனக்காரன்போன்ற உழைப்பாளியும், வேளாண்மைத் தொழில் தெரிந்தவனும் வேறெங்கும் கிடையாது. என்றாலும், வெள்ளிப்பணம் ஆடக்கூடிய திருக்கூத்துகளொன்றும் அவனுக்குத் தெரியாது. ஆதலால், பாங்குகளும், அவற்றின் ரகசியங்களும், அவற்றால் பரஸ்பர நாணயமதிகரித்து மகாஜனங்களுக்குண்டாகக்கூடிய நன்மைகளும், இந்த வகுப்பினருக்கு நாளதுவரை விளங்குவதில்லை. ஆகவே, இவன் சாவுகார்கையில் அகப்பட்டு, அவர்களுக்கிரையாகிப் போய்விட்டான். பணம் அவசரமாக வேண்டியபோதெல்லாம், அடுத்த அறுவடை மகசூலை அடைவுவைத்துக் கடன் வாங்குவதும், அதுபோதாவிட்டால், நிலத்தை 'அடைத்து' வாங்குவதும், வட்டியும் முதலும் கெடுவில் செலுத்தத் தவறுவதும், ஷாத்து வட்டி கொடுப்பதும், காலக்கிரமத்தில், ஒட்டாண்டியாவதும் பதிவாகிவிட்டது.

சாவுகாரன் பிழைப்போ வெகு கோலாகலமாகிவிட்டது. தான்னியங்களை அறுவடை காலத்தில் வெகு சலீசாக வாங்கிப் பின்னடிவிலை நன்றாயேறியபிறகு விற்று, விதைக்காகக் குடித்தனக்காரனுக்கும் அதே விலைக்குக் கொடுத்து, லாபத்தை இருகையாலும் வாரிப் போட்டுக்கொள்ளலானன். வட்டியோ, நூற்றுக்கு எழுபத்தைந்தும், சில சமயங்களில் 'சரிக்குச்சரியாகவும்' இருந்ததுகொண்டு, அனேகமாய் ஒருமுறை கடன்வாங்கி யவனுக்குப் பூமி காணி முதலிய சகல சொத்தையும் தோற்றுவிட்டுப் போவதையொழித்து வேறு வகை காணமற் போய்விட்டது. ஆகவே குடியானவன் இச்சாவுகாரனுக்கு வார சாகுபடி செய்யும் ஆளாகி, அற்றைக் கூலிகாரனுக்கும் தனக்கும் பேதமற்று, க்ஷாமமோ, வேறு கஷ்டமோ வந்தால், அக்காலத்திலுதவக் களஞ்சியமென்பதும் அற்றுப்போய்க் கஷ்டப்பட ஆரம்பித்தான்.

சர்க்காருக்கு இது விசதமாகியதும் பரிகாரந் தேடலானர்கள். முதன்முதல் ஏதேதோ சிகிச்சைகள் செய்தும், அவைகள் ஒன்றும்

பலிக்காமல், நோயொருபுறமும், சூடொருபுறமுமாக, வியர்த்தமாயிற்று. ஆகவே அவர்கள் போட்டவிடத்திற் தேடுவது நலமென்று கண்டு, கோஆபரேடிவ் என்ருல், அன்னியோன்னிய சகாயமுறையில் பாங்குகள் ஏற்படவேண்டிய பிரயத்தினம் செய்யலானர்கள். 1892-ம் ஸ்த்தில் மதிராசு கவரன்மெண்டார் ஸ்ரீமான்-சர். எப். நிக்கல்ஸன் துரையவர்களே இது விஷயமாய் விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி நியமித்தார்கள். அவரும், ஜர்மனி முதலிய தேசங்களில் நடக்கும் முறைகளேயும், மதிராசில் ஆங்காங்கு நடந்துவரும் நிதிகளேயும், அவற்றின் குணதோஷங்களேயும் பரீக்ஷித்து, ஜர்மனியில் குடித்தனக்காரருக்கிருப்பதுபோலவே இவ்விடத்திலும் கிராமபாங்குகள் ஏற்படவேண்டு மென்ருர். இதற்குள், பஞ்சாபில் இரண்டு உத்தியோகஸ்தர், 'தான்னிய கோளங்கள்' என்னும் தான்னியப் பாங்குகளே ஆரம்பித்து நடத்தினர்கள். அந்த முறைப்படி, ஒரு கிராமத்திலுள்ள குடிகளில், சுமாராகச் சக்தியுள்ளவர் ஒன்றுகூடி, விளேச்சல் தருணத்தில் தான்னியத்தைக் களஞ்சியங்களில் சேகரித்து, விலேயுயர்ந்ததும் அதைவிற்று, வந்த முதலே மெம்பர்களுக்குச் சலீசு வட்டிக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனல் இவை யொன்றும் காரியத்திற் குதவவில்லே.

கடைசியாக யூனைடெட் மாகாணத்தில் ஒரு சிவில் உத்தியோகஸ்தரான ஸ்ரீமான் பேர்னேக்ஸ்துரை இவ்விஷயத்தை நன்காராய்ந்து ஒரு சிறு புஸ்தகம் எழுதினர். அதில் அவர் ஜர்மானிய முறையை• இந்தியாவுக்கு, அமைக்கக்கூடிய வகையைச் செம்மையாய் விளக்கிக் காட்டினர். இந்தியாவில் கிராமமென்பது எத்தனேயோகாலமாய்ச் சுவதந்திரம் வகித்து வந்திருப்பதையும், அதனல் அந்நியோந்நிய சகாயம் தொன்றுதொட்டு வனுத்திருப்பதையும், கிராமவாசிகள், அனேக இடங்களில் சாகுபடி பூமியைப் பொதுவில் வைத்துக்கொண்டு, சர்க்கார் தீர்வையையும் தாங்களே வசூல்செய்து கொடுத்து வருவதையும், கிராமத்தில் ஆகவேண்டிய சகல காரியங்களுக்கும், பஞ்சாயத்தோ, வேறு ரூபமான சபையோ ஏற்பட்டு நடந்து வருவதையும், அவர் விவரித்துக் காட்டினர். பிரிட்டிஷ் துரைத்தன ரீதியில், இம்மாதிரிப் பஞ்சாயத்து முதலியவற்றிற்கு இதுவரை வலிமை குறைந்து வந்தாலும், இவை இன்னும் உயிருடனிருந்தால் இவற்றைக்கொண்டு அனேக நன்மைகளேக் குடிகளுக்கு விளேவிப்பது சாத்தியமென்று அவர் ருசுப்படுத்தினர். ஆகவே இவற்றினுதவியால் பாங்குகள் ஜர்மனி முறையில் இந்தியாவிலும் ஏற்படுவதும் தழைப்பதும் சாத்தியமென்று விளங்கிற்று.

ஜர்மானியப் பாங்குகள் தழைப்பதற்கு ரகசியம் ஒன்றேதான். கிராமங்களிலுள்ள யோக்கியர்களும், கிருகஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து தங்களுடைய நாணய பலத்தின் உதவிகொண்டு பெரிய பாங்குகளிலிருந்து வேண்டியவளவிற்கு ஆவசியகம்போல் பணம் சலீசு வட்டிக்கு வாங்கி வருகிருர்கள். ஒரு நாணயஸ்தனேவிடப் பத்துப்பெயர் சேரும்போது பணம் சலீசாய்ப் பெயருகிறது. இதை கிராமவாசிகளாகிய மெம்பர்களுக்கு மட்டுமே கொடுப்பது, தாங்கள் பெரிய பங்குக்காரருக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட வட்டி வீதத்தைவிடக் கால்ரூபா அரைரூபா அதிகம் வைத்துவிடுவதால், செலவு கட்டுவதுடன் லாபமும் தேறுகிறது. பாங்குக்காரருக்கு ஆள் தராதரம் நன்ருய்த் தெரியுமாதலாலும், கடன்வாங்குவதற்குக் காரணமும் விளங்குமாதலாலும் துர்விநியோகத்திற்குப் பணம் அகப்படுவது பிரயாசம். இது கொண்டும், வேறு நிபந்தனேகள் பலவிருப்பது கொண்டும், ஆயிரக்கணக்கான பாங்குகளில், "தீவாளியாக"ப் போவதென்பது வெகு அபூர்வம். ஆகவே

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2 - JUL 1910 MADRAS.

இப்படி யேற்பட்ட பிறகு ஜர்மானியக் குடித்தனக்காரருக்குச் "சாவுகாரக் கிரகணம்" நீங்கி இப்போது வெகு சம்பிரமமாகப் பிழைத்து வருகிறார்கள்.

ஆதலால் இம்மாதிரிக் கிராமப்பாங்குகள் இந்தியாவிலும் ஏற்படவேண்டு மென்றும், அவற்றிற்கு முதலுதவுவதற்குப் பெரிய பட்டணங்களில் பெரும்பாடியாகப் பாங்குகள் ஏற்படவேண்டு மென்றும், இவ்வழியாகத் தேசமெங்கும்பாங்குவடங்களேற்பட்டுப்பட்டணங்களிலிருந்து கிராமங்களுக்கும், கிராமங்களிலிருந்து பட்டணங்களுக்கும் பணம் நடமாடிக் கொண்டிருந்தால், குடியானவர் கஷ்டம் விடியுமென்றும், துரையவர்கள் சொன்னார்கள். உடனே இதையனுசரித்து நடவடிக்கை நடத்தும்படி அவரையே யூனைடெட் மாகாணச் சர்க்கார் நியமிக்க, அவரும் அப்படியே. பாங்குகளை அனேக கிராமங்களில் ஸ்தாபித்து அவற்றில் வேலை ஜரூராகநடந்து வந்தது. ஜர்மானிய சம்பிரதாயப்படியே அந்தந்தக் கிராமத்தார், அவரவர் பாங்குகளைச் சீராக நடத்திவந்தார்கள். இந்தப் பாங்குகளில் தங்களுக்கு விசுவாசமிருப்பதற் கடையாளமாகத் தாங்கள் மிகுத்து வைக்கக்கூடிய ரூபாய்களையும் சில்லரைகளையும் இதில் டிபாசிட்டு வைக்கலானார்கள். இப்படி யேதோ நடந்தவரை க்ஷேமமென்று காணவே, அக்காலத்தில்ராஜப்பிரதிநிதியாயிருந்த கர்ஜன் பிரபு இதற்கென்று சட்டமொன்று ஏற்படுத்தினார்.

இது ஆரம்பமாகி எட்டு வருஷமும், சட்டம் பிறந்து சுமார் ஐந்து வருஷமும் தானாகிறது. என்றாலும், இதற்குள் இம்மாதிரிப் பாங்குகள் இந்தியாவில் எங்கும் பரவி அற்புதமாக வேலை நடந்துவருகிறது. 1908-ம் ௵த்தில் 1201-பாங்குகளும், 55,500-மெம்பர்களுமிருந்தன. நிதி மொத்தம் 44-லக்ஷம். இதில் சர்க்கார் சகாயம் விசேஷமாயில்லை. எல்லாம் மெம்பர்களே செய்துவருகிறார்கள். தெரியாதவர்களுக்கு இதன்சக்தியை விளக்கியும், பாங்குகளுக்குச் செலவில்லாமல் தணிக்கை செய்துவர ஆசாமிகளை யேற்படுத்தியும் செய்வதைத் தவிர்த்துச் சர்க்கார் செய்யவேண்டிய காரிய மொன்றுமில்லை. 1908-ம் ௵த்திய ரிபோர்ட்டு இன்னும் அற்புதம். முதல் இரட்டித்துவிட்டது. சர்க்கார் சகாயம் வெகு சொற்பம். ஆதலால் இப்பாங்குகள் ஜனங்களுக்குச் சம்மதமாகி விட்டனவென்றும், அவர்களுக்கு வேண்டியவளவிற்குக் கடன் முதல் தேறுமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இந்தியக் குடியானவனுக்கு வெகுநாளாகத் தெரிந்த பாங்கு 'மொந்தை யொன்றேதான். அதாவது ஏதோ மீத்துவைக்கக்கூடிய வெள்ளிப்பணத்தை மொந்தையில் போட்டுப் புதைத்து வைப்பதும்,இல்லாவிட்டால் வெள்ளிவளைகளாக்கிப் பெண்டிர் கையில் போடுவதும் தான் இவனுக்குத் தெரிந்த லேவாதேவி. ஆகையால் இப்படி யொருவரையும் நம்பாமல் தலைமுறை தலைமுறையாக வைப்பது பதிவாகி வந்திருக்க, இப்பொழுது திடீரென்று தங்கள் சில்லரைகளைப் பாங்கில் போட்டு, வேண்டும் போது கடன் வாங்கிப், பாங்குகள் விஷயத்தில் இவ்வளவு விசுவாசம் வந்திருப்பது அவனுக்கு நல்ல அதிர்ஷ்டம் தான். எங்கெல்லாம் இம்மாதிரிப் பாங்குகள் செழிக்கின்றனவோ, அவ்விடத்திலெல்லாம் இப்போது வெள்ளிப் பணத்தைப் புதைப்பதுமில்லை. உருக்கி வளைகளாக்குவது மில்லை. ஆனால் 'கெண்டையைப் போட்டு வராலை யிழுப்பது,' என்கிற நியாயப்படி வர்த்தகம் விருத்தியாவதற்கும், ஜனங்களுக்குள் செல்வம் அதிகரிப்பதற்கும் சாஸ்திரப்படி அது நற்சாதனமாகிறது. இப்போதுள்ளவரை இவற்றை விதைப்புக்காலமென்னலாம். இனிக் காலக்கிர

மத்தில் அறுவடையாகும்போது விளைச்சல் பெருவாரியாகி, எல்லோருக்கும் திருப்திகரமாகவே யிருக்கும். இந்தியாவில் எல்லா விடத்திலும் இதுவரை மொங்கைபோய்ச் சேரும் பணம், இனியப்படித் துருவேறுமல், ஜனங்களுக்குள் நடமாடி வேளாளருக்கும், தொழிலாளிகளுக்கு முதவுமானல், அதனல் இந்திய மகாஜனங்களுக்குண்டாகும் நன்மை யிவ்வளவென்று யாரால் நிதானிக்கமுடியும்? அதனலுண்டாகக்கூடிய நன்மைகளை நினைக்க உடம்பு புளகாங்கிதமாகிறது.

மெம்பர்களும், முதலும் வெகு சீக்கிரத்தில் கோடிக்கணக்காகி விடும் போலிருக்கிறது. அப்படியாவதில், இந்தியாவை அடிக்கடிக் கொள்ளைகொள்ளும்படியான க்ஷாமங்களும்நீங்கிப் போம். அது மூலமாகச் சர்க்காரைத் தூறுகிறவர்கள் வாயும் அடைபடும். அனேகர் எண்ணுகிருர்கள், இந்தப்பாங்குகள் ராஜத்துரோகிகள் கையில் ஓர் ஆயுதமாகத் தீர்ந்து விடுமென்று. இது தப்பு. ஏனெனில் எவனுவது ஒருவனை நாடோடியாக வொட்டாமலும், ராஜபக்தியின் அருமை தெரியும்படிக்கும் செய்யவேண்டுமானுல், அதற்கு அவனுக்குக் கொஞ்சம் பசையுண்டாக்குவதைவிட வேறு உபாயம் இல்லை. லாபம், நஷ்டம், என்கிற விவகாரம் எவனுக்கிருக்கிறதோ அவனே கிருகஸ்தனுகக் கூடியவனல்லது, வெறும் நாடோடியும், ஒட்டாண்டியுமல்ல. நாடோடிப் பயல்களுக்கு இவ்விதமாக வேதாகிலும் ஓர் 'கால்கட்டு கட்டிவிட்டால், தன்னிச்சையாகவே அவர்கள் பிதற்றுவதைவிட்டு நேர்வழி நடந்து முன்னுக்கு வருகிருர்கள். ஆதலால் இதுவரை இந்தியா கவர்ன்மெண்டார் செய்துவந்திருக்கிறபடி நேர்வழியிலேயே நடந்து, இந்தப்பாங்குகளைச் செழிக்கச் செய்து, அதிகமாக நிஷ்டூர் ஒன்றும் செய்யாமல், அந்தந்தப் பிரதேசங்களுக்குள்ள லக்ஷணங்களை யனுசரித்தே வேலை நடத்திவருவாரென்றுல், காலக்கிரமத்தில் கிருகஸ்த மார்க்கம் பிரபலித்து, ஜனங்களுக்கு விவேகமும் தொழிற்றிறமையும் விருத்தியாகி, சாவுகார் முதலிய விஷப்பூண்டுகள் நசித்து, மகாஜனங்கள் க்ஷேமமடைவார்களென்பது நிச்சயம்.


(மார்னிங்கு போஸ்டு)

## தென்னிந்தியாக் கால்நடைகள்.


ஸ்ரீமான் தாமக்கிரந்தி அவர்கள்

இந்தியாவில் பசுமாடு, காளைமாடு, எருமைமாடு, முதலிய கால்நடைகள் விஷயத்தில் ஜனங்களுக்குப் பக்தி எவ்வளவு காலமாயிருந்து வருகிறதென்றும், எவ்வளவிற்கு வேரூன்றியிருக்கிறதென்றும் நாம் சொல்லவேண்டியதில்லை. பசுமாடு ஒன்றுமட்டும் நன்ருயிருந்தால் நமக்குவேண்டியதெல்லாம் குறைவறக் கிடைக்குமென்பதை உட்கருத்தாகக்கொண்டு தான் தேவலோகத்திலும் நாம் காமதேனுவைச் சிலாகிக்கிருேம். இவ்வுலகத்திலோ பசுமாடுகளுக்கு நாம் பூஜை செய்கிருேம். பசுவின் பாலை அமிர்தமாக உயர்த்திவைத்திருக்கிருேம். அமிருதத்தைவிடப் பரிசுத்தமானதென்று பாலை, கவியாகிய காளிதாஸனும் வருணித்திருக்கிருர். இந்தியாவில் 'உயர் குலத்தார் என்னப்படுவோர் அனைவரும், மாமிசம், மீன் முதலியவற்றை விலக்கியவரல்லர். பங்காள முதலிய பல இடங்களில் அவ்வகையோரில் அனேகர் மீன் தின்பவர்கள். ராஜ புத்திரர் முதலிய க்ஷத்திரிய குலத்தவருக்குச் சாமான்னியமாய்ப் பக்ஷிமிருகங்களும், மீனும், உணவிற்கேற்றவைதாம்.

ஆனுல் சேது முதல் இமாசலம்வரையில் இந்துக்களென்னப்படுவர் யாரும் பசுமாடு, காளைமாடு, இவற்றை உணவிற்காகக் கொல்லுவதென்பதைச் சொப்பனத்திலும் கொள்ளார். ஆதலால் இந்துவென்பவனுக்கும், இதானுக்கும் பேதமென்ன வென்ருல், பசுவிற்கேற்பட்ட மரியாதை யென்று தாராளமாகச் சொல்லலாம். அதுகொண்டே, தற்காலம் சண்டாளரென்று ஒதுக்கிவைத்திருக்கும் அனேகருக்கும், மற்றுள்ளோருக்கும், ஏற்பட்டிருக்கும் முக்கிய பேதமும் இதுவே என்னல் தகும். மாடுகளைக் கொல்பவரும், தின்பவரும் சண்டாளர்கள். அவர்களைப் பக்கத்திலும் சேர்க்க



மைசூர் தினுசு பசுமாடு



ஓங்கோல் தினுசு பசுமாடு

வொண்ணாது. அவர்கள் 'தீண்டாதவராகியே' யிருக்கவேண்டும். பலவிதமாகப் பேசுவது அனாவசியம். மொத்தத்தில் கோவறத்தி (பசுவைக் கொல்லுதல்)யை விடப் பாபமும் இல்லை, கோதானத்திற்கு மிஞ்சின தானமும் இல்லை.

இந்துக்களை இகழ்ந்து பேசுபவர்கள் முன்னொருகாலத்தில் இவர்களும் பசுக்களைக் கொன்று யாகம் செய்து இறைச்சியைத் தின்றதாகவும், ஆதலால் இப்போது போடும் வேஷத்திற்கு அர்த்தமில்லையெனவும் சொல்லுவதுண்டு. அப்படியிருந்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். அதனால் என்ன ருசுவாகிறது. 'மூலம்' கண்டுபிடிக்கப் புறப்பட்டால், எல்லார் பிழைப்பும் அம்பலம்தான், என்பது ருசுவாகிறது. சில ஜாதியாரில் வயது கூடியவர்களைக் கொன்று ஒருநாள் விருந்திடுவது வழக்கமென்று கண்டால், அதற்காக அவர்கள் நாகரீகமுதிர்ந்து, நற்குணங்கள் பெருகிய பின்னும் அதையே சுட்டிக் காட்டுவதற்கு என்ன நியாயமோ, அதுதான் இதற்கும். இந்தப் பதர்ப்பேச்சு சாதுக்கள் ஒப்பக்கூடியதன்று.

மொத்தத்தில் இப்போது வெகு நூற்றாண்டுகளாக இந்தியாவில் பசுவைப் பூஜிப்பதும், பரிபாலிப்பதும், தானம் செய்வதும் ஆசாரமே தவிர, உணவிற்காகக் கொல்லுவதன்று, என்பது வாஸ்தவம். எருமையை மட்டும் இரண்டாம் தரமாகக் கொண்டிருக்கிறோம். சில இடங்களில் அது துர்க்கைக்குப் பலியாகிறது. நீலகிரி மலையிலுள்ள தொழவர்களுக்கு மட்டும் அது பிதிர்ப்பலியாகிறது. அந்த ஜாதியார் எருமைப்பாலையே விசேஷ உணவாக உபயோகித்து வருவதால், மாண்டவர்களுக்கு மறுஉலகத்தில் உபயோகமாகும்படி அத்தருணத்திலோ, அல்லது வருஷமுடிவிலோ, ஒன்று அல்லது அதிகப்பட்ட எருமைகளைக் கொல்லுகிறார்கள். நம்போலியர் போய் ஆக்ஷேபித்தால் பூஜாரி சொல்லுகிறான் "ஐயா, மனிதனுக்கு பெற்றோரும் கூடவருவதில்லை, உடற்பிறந்தோருமில்லை, வயற்றிற் பிறந்தோருமில்லை. எருமையொன்று மட்டுமே தான் கூடவருவது" என்று. நாகரீகமுதிர்ந்தோர் தருமம் மட்டும் கூடவருகிறது என்கிறார்கள்.

ஆதலால் நாம் மேற்கூறியபடி பசுமாடு முதலிய கால்நடைகளை வதைப்பவர் இந்தியரன்று. அவற்றினிடத்தில் பக்தி எவ்வளவென்பதும், அவற்றை எவ்வளவு விசுவாசமாய்ப் போஷித்து வருகிறார்களென்றும், அன்னிய நாட்டார் பார்த்தவரெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

என்றாலும் பசுக்களைப்பற்றிய சாஸ்திரம் ஒன்றும் நாளதுவரை நம்மில் காணுவதில்லையென்றே சொல்லிவிடலாம். மற்ற விஷயங்களில் நடப்பது போலவே, மாமூலாக நடவடிக்கைகள் சில ஏற்பட்டு நடந்து வருகின்றன. அதைத்தொழில் தெரிந்த சிலர் அனுபவத்தில் கற்றுப்பரிபாலனம் செய்துவருகிறார்கள். பெரும்பாலார் பழையபடி குருட்டுத்தனமாகவே காலங்கழித்து வருகிறார்கள். ஓட்டைச் சட்டியென்றாலும், கொழுக்கட்டை வெந்தால் சரி. ஏதோ பசுமாடு ஒன்று இருக்கவேண்டும். பால் கறக்கவேண்டும். நன்றாய்க் கறந்தால் நம்முடைய அதிர்ஷ்டம். இல்லாவிட்டால், கறந்ததைக்கொண்டு எப்படியோ காரியம் நடக்கவேண்டும், என்பதே பெரும்பாலாருடைய மனோதருமமாகியிருக்கிறது.

ஆனால் இதுவரை இப்படியிருந்து காலக்ஷேபஞ் செய்துவந்தபடி, இனி யெக்காலத்திலும் நடந்தேறி வருவது பிரயாசம். ஆதலால் மற்ற விஷயங்களில் எப்படிச் சாஸ்திரப் பயிற்சி அதிகரித்து அதனால் நற்பயனுஞ் சித்திக்கிறதோ, அவ்வாறே பசு விஷயத்திலும் சித்திக்கும்படி பார்க்கவேண்டுவது அறிவுடையோர் லக்ஷணமாம்.

உதாரணமாக வாழையென்றால், எல்லாம் ஒரு போக்கல்லவென்று யாருக்கும் தெரியும். பழத்திற்காகச் சில தினுசுகளும், இலைக்காக வேறுவகைகளும், காய்க்காக மற்றுஞ் சிலவர்க்கங்களும் பயிரிடுகிறோம். பூசாரத்தை வேண்டியபடி எரு முதலியன சேர்த்து மாற்றுகிறோம். மாமரத்தைக் 'கட்டு' மூலமாக வேண்டியபடி காய்க்கச் செய்கிறோம்.

இதுபோலவே பசு வர்க்கங்களிலும் சில உபாயங்கள் செய்கிறோம். பால் அதிகம் வேண்டுமானால், பசும்புல், பருத்திக்கொட்டை, முதலிய உணவுகளை அதிகமாய்க் கூட்டுகிறோம். கன்று கொழுக்க வேண்டுமானால் அதற்கு வேண்டியதைச் செய்கிறோம். ஆனாலிவையெல்லாம் குருட்டுச் சாஸ்திரமாகக் காணுகிறதே யொழிய, எல்லாருடையவும் யுக்திக்கு ஒப்பியதாயில்லை. ஏனெனில் ஓரோர் பிரதேசத்தில் ஓரோர் ஐதிகம் வேரூன்றியிருக்கிறது. அதில் நல்லது அனேகமிருக்கலாம். ஆனால் அது இதரர்களுக்குத் தெரியும் வகையில்லை, அவ்வாறே வேற்றூர்களிலுள்ள நலங்கள் இவருக்குப்பயன் படுவதற்கும் இடமில்லை.

முக்கியமாக இந்தக்குறைவு வர்க்கபேதத்தில் காணும். இரண்டாவதாகத் தீனிவிஷயத்திலும் வைத்தியவிஷயத்திலும் சொல்லலாம்.

ஏனெனில் பசுக்களைப் பலன் படுத்துவதற்குப் பழைய சம்பிரதாயமாகக் கோவில் மாடுகள் தான் உபயோகப்படுவது. கோவில்மாடுகள் தகுந்த மாப்பிள்ளைகள் தான். ஆக்ஷேபமில்லை. ஆனால் இன்ன தினுசைத்தான் கோவிலுக்கு விடுவது, என்கிற நியமம் நம்முள் இல்லை. ஆதலால் வர்க்கம் போதிக்காமல் செழித்து வருவதற்கு நாம் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை.

இப்படியே தீனி விஷயத்திலும். கொழுக்கட்டைப்புல் என்கிற தினுசு கோயமுத்தூர் ஜில்லா காங்கய நாட்டில் விசேஷித்துக் காணுவது. இதற்கு எத்தனையோ மகிமை யிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமாகில் இந்தப் புல்லை வேறு பல இடங்களிலும் விர்த்தியாகச் செய்துகால்நடைகளுக்கு ஏன் உபகாரம் செய்வதில்லை? இப்படியே வெள் வேலங்காய் முதலிய சரக்குகளிலுமெனக.

இப்படி வெகு நாளாக ஒவ்வொரு சிறு பிரதேசத்திலும் சில மாமூல்களேற்பட்டு, மாமூல் பிசகாமல் நடத்திவருவதில் இனி நமக்கு வலுத்த காரியமொன்றும் கைகூடாதென்று நாம்மேலே குறிப்பிட்டபடியால், இந்தத் தோஷத்தைப் பரிகரித்துக் கால்நடைகளை எங்கு பார்த்தாலும் வேண்டியபடி இருக்கும்படி செய்வது தேச க்ஷேமத்தை நாடும் ஒவ்வொருவருக்கும் தருமமாம். இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் மேனாட்டாரே நமக்கு மார்க்கதரிசிகளாயிருக்கிறார்கள். யாராகிலும் நமக்கு இதம் சொன்னால் அதைக் கேட்பதே விவேகத்திற்கு அடையாளமாம். சமீபத்தில் மதிராசு கவர்ன்மெண்டு கால்நடை வைத்தியத்தில் அமர்ந்து அனுபோக முதிர்ந்த டாக்டர் ஸ்ரீமான் கன்துரையவர்கள் தென்னிந்தியாவில் காணும் கால்நடை தினுசுகளையும், அவற்றின் குணதோஷங்களையும் விவரித்து ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அது இங்கிலீஷிலிருப்பதில், இந்நாட்டில் பெரும்பாலார்க்கு உபயோகமில்லையாதலால், அதில் சாரமாயுள்ளதைமட்டும் ஒழியும்போது எடுத்து 'விஹாரிணி' அபிமானிகளுக்கு விநியோகம் செய்கிறோம். விவசாயத்தில் அக்கரையுள்ளவர்களுக்கெல்லாம் இது அரிய பெரிய விஷயம் என்பது சொல்லாமலே விளங்கும். புஸ்தகம், பிரசங்கம், காக்ஷி என்னும் மூவகைச் சாதனங்கள் இவ்விஷயத்தில் ஜனங்களுடைய அறிவைப் பெருக்க ஏற்றவைகள். இவை மூன்றும் கிட்டாமலிருப்பவர்களுக்கு ஏதோ ஒருவிதம் உபயோகப்பட்டு ருசி யுண்டாக்கு

REGISTERED 2-JUL 1910 OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.

வதற்காகவேண்டி இம்மாதிரிச் சிறுவியாசங்களும், உருவப்படங்களும் ஒருசமயம் உதவலாமென்பது நமக்கு நம்பிக்கை.

தென்னிந்தியாவில் முக்கியக் கால்நடை வர்க்கங்கள் 'மைசூர்' தினுசு ஒன்றும், 'ஒங்கோல்' அல்லது 'நெல்லூர்' தினுசு ஒன்றுமாம். மைசூர் தினுசுதான் சாமான்னியமாய் மதுரை, திருச்சிராப்பள்ளி வகையரா தென் தேசத்திலெங்கும் விசேஷித்துக் காணுவது. சளையாமல் பெரும்பாரந் தாங்கிப் போக வேண்டுமானல் நெல்லூர்தினுசு வெகுதிறம். சவாரி விஷயத்திற்கும், ரோஷத்தோடு ரோட்டுகளில் வேகமாய் நடப்பதற்கும் மைசூர் தினுசுதான் ஏற்றதாம். நெல்லூர் உருப்படி பெருத்தது. மைசூர் கால் குளம்பு இறுகியது.

ஆனல் இவையிரண்டும் மொத்தத்தில் வேறுபட்டுக் காணுவதாயினும், ஒவ்வொரு தினுசிலும் பல உட்பிரிவுகள் காணுவது சகஜம். பூசாரம், உணவு, காலபேதம் முதலிய காரணங்களை அனுசரித்து மனிதருடைய ரூபம், குணம் முதலியன எப்படி மாறுகின்றனவோ, அப்படியே கால்நடைகளுடையவும் ரூபமும், குணமும் மாறுகின்றன. சாமான்னியமாய் இந்தியக் குடியானவன் 'ராகிக்களியும் கீரைக்கறியும்' போதுமென்று எப்படிக் காலந்தள்ளி வருகிருனே, அப்படியே இவ்விடத்திய கால்நடைகளும் "புழுதியில் மறைந்து கிடக்கிற அருகங்கட்டையைக்கடித்துக்கொண்டு," ஏதோ காலந்தள்ளி வருகின்றன. தெலுங்கு தேசத்தில் பலவிடங்களில் கால்நடைகள் மலத்தைத் தின்று வருகின்றன. மலையாளத்தில் அனேக இடங்களில் புல் முதலிய உணவை விலைக்கு வாங்கிப்போடுவது அபூர்வம். எல்லா இடங்களிலும் தான்னியம் மனிதனுக்கும், புல் 'பண்டத்திற்கும்' என்பது தான் மாமூல்.

மதிராசு ராஜதானி யெங்கும் கால்நடை அபிவிர்த்தியாகியேதான் வந்திருக்கிறது. என்ருலும் நாம் மேற்கூறியபடி வர்க்கத்தைக் கவனித்து ஜாதிகெடாமல் யாரும் அக்கரையாய் பாடுபடுவதில்லை. ஆதலால் சாமான்னியமாய்ப் பூமியைக் கீறுவதற்கும் உதவாத அனேகம் 'பண்டங்கள்' வாலும் தோலுமாய் எங்கும் காணுகின்றன. இவைகள் இப்படிப் பெருகி அலைவதால், வேலைக்குதவும் நல்ல உருப்படிகளுக்குக் கிடைக்கவேண்டிய தீனியை இவைகள் தின்று, நல்லது, பொல்லாதது, இருவகைப் பண்டமும் கஷ்டப்படுகின்றன.

மேனட்டில் இதற்குப் பரிகாரம் சுலபம். 'உதவாக்கட்டைகளை' ஒழித்து, அவற்றின் தோலையும், மாமிசத்தையும் உபயோகப்படுத்திக்கொண்டு, மற்றவைகளைக் கொழுக்கவைப்பதுதான் அவ்விடத்திய மாமூல். இங்கு அது சாத்தியமில்லையென்று நாம் மேற் கூறியிருப்பதால், அதைமறுபடி விவரிக்க வேண்டுவதில்லை.

இதைப்பற்றிப் பேசுவதில் ஸ்ரீமான் கன்துரை இவ்வாறெழுதுகிருர்:—"பசு, எருது முதலியவற்றைக் கொல்லுவதென்ருல், இந்துவானவன் அதை மகா பாபமாகப் பாவிக்கிருன்; அவற்றின் மாமிசத்தைத் தின்பதென்ருல், அதனல் சண்டாளத்துவம் வந்துவிடுவதாகப் பயப்படுகிருன். என்ருலும் பசுவின் பாலையோ வேன்ருல் வேண்டியமட்டில் குடிக்கிருன்," என்று. இதில் என்ன யுக்திவாத மேற்பட்டதென்று நம்மால் சொல்லமுடியவில்லை. ஜைனர்களில் சிலரும், பாதிரிமார்களில் சிலரும், மதியீனத்தினுல் வாதிக்கிறபடி ஸ்ரீமான் கன் துரையும் வாதித்து, பாலைக்கறந்து குடிப்பதற்கும், மடியையறுத்துத் தின்பதற்கும் விசேஷ வித்தியாசமில்லையென்று கூறுகிருர்போலும்! நிற்க. நமது நாட்டில் நூற்றுக்கு 90-பெயர் விவசாயிகளாகவும், அவர்களுக்குள் எத்தனையோ காரியங்களுக்குக் கால்நடை வேண்டியனவாக

வும் இருப்பதால், அவற்றிற்கு விலைவாசிகூடியே வந்திருக்கிறது. பூமி சாகுபடி விஷயத்தில் ஆதியோடந்தமாக எல்லாக்காரியங்களும் மாடு கன்றுகளில்லாமல் முடியாது. எத்தனை ஏர்ப்பண்ணையமென்று தான் சாதாரணமாய்க் குடியானவனுடைய அந்தஸ்தைக் கேட்டறிவது. மேற்கூறியபடி கிருகக்கிருத்தியத்திற்கும், ஸ்நானாதி காரியங்களுக்கும் பசுவைவிடச் சிறந்த 'வஸ்து' கிடையாது.

இப்படி யெல்லா மிருப்பதால் இனி ஒவ்வொன்றாக இந்த இரண்டு தினுசுகளையும், இவற்றிலிருந்து பேதப்பட்டுக்காணுகிற வேறு தினுசுகளையும் விவரிப்போம். இப்படிச் செய்வதில் நமக்குண்டாகக்கூடிய முக்கிய பலன் இன்னதென்று முன்னமே கூறியிருக்கிறோம். பழைய சம்பிரதாயம் குருட்டுத்தன மென்பது சுலபத்தில் விளங்கும். என்றாலும் அந்தச் சம்பிரதாயமாவது கெடாமலிருந்தால் தேசத்திற்குக் கொஞ்சம் க்ஷேமம் கூடும். ஆனால் அதுவும் இப்பொழுது சொல்லிக்கொள்ளுவதற்கில்லை. கோவில்காளைகள் இப்போது முன்னிருந்தமாதிரி பிரபலமில்லை. மலையாளத்தில் மட்டும் 'கூற்றன் மூரிகள்' சுமாராகக் காணுகின்றன. மேய்ச்சலுக்கு முன்மாதிரிச் சௌகரியங்கள் இல்லையென்பது எல்லோருமறிந்த விஷயம். 'சூலம்' முதலியன போட்டுவிடும் கன்றுகள், வேலைக்குதவாததலால், எங்கேயோ போய்க்கடைசியில் கசாப்புக்கடைக்கு உதவுகின்றன. புதிதாக நோய் கண்டால் வைத்தியம் தெரியாமல் அநேகம் 'பண்டங்கள்' நஷ்டமாகின்றன.

•

நமக்கிருப்பதை விவரமாகத் தெரிந்துகொண்டால் மேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு அனுகூலமுண்டென்பது சித்தமாதலால் அந்த லக்ஷ்யத்தை முன்னிட்டே நாம் இதையெழுதலானோம். மைசூர் தினுசைப் பற்றி, மற்றொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

## பெருவாழ்வு

(ஸ்ரீமான் டௌன்ஸ் என்பவருடைய
ஆங்கிலக்கவி மொழிபெயர்ப்பு)

ஸ்ரீமான் எஸ். திசைவிநாயகம் பிள்ளையவர்கள்
(தூயள் வெண்செந்துறை)

கருத்திலெழுமரியவுருக்
    கவின்கொளநற்சிலையிற்
கண்காணத் தெரிப்பமிகக்
    கைவருந்திறிதமும்
அருத்தியொடுமெய்த்தளர்வும்
    அகத்தளர்வும்பாரா
தாமளவுமுயன்றிடுவர்
    தோமறுசிற்பியரே. (1)

அருமையிலும்பெருமையிலும்
    அழகியதன்மையிலும்
அற்புதக்களுக்கண்டிங்
    ககிலமகங்களிப்பான்
உரிமைபெறுமோவியங்க
    ளுருவாக்கவல்லார்
உறுதுயரும்படும்பாடும்
    உலகிலெவரறியார்? (2)

பெருமைபெறுதிருக்கோயில்
    பெட்புறவேயமைக்கும்
பேராளனத்தளியின்
    பெரியசினகரங்கள்
ஒருமைகொளவுயர்வானம்
    உறமளவுமெழவே
உயிர்வாழும்நாள்முழுதும்
    உதவிடினும்வருந்தான். (3)

இமையவரினுலகதனில்
    இருந்துவருமருந்தாய்
இதயமதிலெழுமினிய
    இறும்பூதுகொண்டே
அமையவொருகவிபாட,
    அரியபெரும்புலவர்
அடைவருத்தம்செல்காலம்
    அணுவேனும்மதியார். (4)

கல்லுருவும்பொடியும்நிறம்
காண்படமும்மங்கும்;
கண்களிக்குந்திருத்தளியும்
மண்குளிக்குந்திண்ணம்;
சொல்லிலொருநூறாண்டு
சொல்லுவதுமரிதாம்
சொந்தமெனப்புலவர்தரு
சந்த முறுகவியே. (5)

ஜீவிதத்தை விதியதனைத்
திருத்தமுறத்திருத்தும்
திவ்வியநற்சீவாத்ம
சிற்பியரும்யாமே
மூவுலகில்எக்காலும்
முடியாதபொருளில்
முயற்சியொடுபணிகாணும்
மொய்ம்புடையோர்யாமே. (6)

ஆதலினெத்தனைபொறுமை
அமைந்திடுதாற்பரியம்
அன்புநிறைதோத்திரத்தோ
டகம்நிறையுமெண்ணம்
மேதகுவிடாமுயற்சி
யாதியொடுநாளும்
வீடாதபெரும்பொருளை
மேற்படுத்தவேண்டும்! (7)

---

எங்குபார்த்தாலும் சங்கங்களும், சபைகளும் மலிந்துவருகின்றன. ஆதலால் இந்நாட்டில் ஜனங்களுக்குள் ஜீவகளை அதிகரித்துக்காணுகிற தென்பதில் தடையில்லை. பரஸ்பரமாச்சரிய மட்டும் இல்லாமலிருக்கும்வரை, மைசூர் ஒக்கிலியர் சங்கம், கவரை வடுகர் சங்கம், கம்மவார் வடுகர் சங்கம், தொண்டைமண்டலம் வேளாளர் சங்கம், தஞ்சாவூர் மராட்டியர் சங்கம், மைசூர் சுவேதாம்பரஜைன சங்கம், இப்படிப்போல் இனி எத்தனை ஆயிரம் சங்கங்களிருந்து செழித்தாலும், நாட்டிற்கு நலமே தவிர வேறு குணமில்லை. ஒவ்வொரு சங்கமும் கவனிக்கவேண்டியது இது——நாம் முதன் முதல் இந்தியர்கள். பிறகு மற்றவகையோர்கள் என்பதேயாம்.

---

தளி = கோயில்
இரும்பூது = அதிசயம்; ஆச்சரியம்.

## நிறப் பதார்த்தங்கள்

(ஆயுர்வேத பூஷண, பண்டித ஸ்ரீமான்
எம். துரைஸ்வாமி அய்யங்கார், திருச்சினுப்பள்ளி.)

இப்பொழுது நம் தேசத்தில் நடைபெறும் பற்பல தொழில்களில் முக்கியமாய் நெசவுத் தொழிலில் பலவகையான சாயங்களின் நிமித்தம் தொழிலாளிகள் நிறப்பதார்த்தங்களின் விஷயங்களைப் பெரும்பாலும் ஏதோ முனைப் புல் மேய்வதுபோல் அறிந்தும், இவ்விஷயங்களைச் சாஸ்திரப்படி படித்தறியாமற் காரியங்களைச் செய்யப் புகுவதும், இவர்களது காரியங்களிற் பலவற்றைப் பயனற்றவைகளாகவும், வேறுசிலதைச் சிறிதளவு உபயோகமுள்ளவையாகவும், மற்றும் சிலவற்றைத் தற்செயலாய் மேன்மையானவையாகவும் செய்யக் காரணமாகுமென்பதை நம் நேயர்களிற் பெரும்பான்மையோர் அறியாமலிருக்கவில்லை. ஆனது பற்றி ஆங்கிலமறியா நம் தொழிலாளிகளிற் பலர் (தமிழ் படிக்குந் திறமையுடையோர்) இதை யறியட்டுமென நினைத்து, இவ்விஷயம் பௌதிக சாஸ்திரப்படி (இச்சாஸ்திரமுறைப்படி விஷயம் அனைவருக்கும் எளிதில் அறிவது வருத்தமாகத் தோற்றினும்) கூடியமட்டும் அனைவரும் அறியுமாறு இங்குத் தமிழில் யாம் வெகு சுருக்கமாக எழுதப்புகுந்தனம்.

கொச்சினீல் என்கிற பூச்சியின் சிவப்பு நிறத்தைத் தவிர சேதன நிறப் பதார்த்தங்கள் எல்லாம் தாவரங்களி (செடி கொடி முதலியவைகள்) லிருந்தே வரும். இவைப் பௌதிக சாஸ்திர நீதியாக லக்ஷணம் அல்லது தன்மைகளில் ஒன்றையொன்று ஒத்தவைகளல்ல. ஆயினும் ஒரே தொழிலில் வழங்கப்படுமாதலால் இங்கு தொடுத்துச் சொல்லப்படும். இயல்பிலில்லாத அனேகம் உத்தமமான நிறங்கள் தகுந்த பௌதிகச் செயலால் தாவர பதார்த்தங்களிலிருந்து தோற்றுவிக்கப்படும்.

புஷ்பம் முதலிய தாவரப் பகுதிகளிலே இயல்பாயுள்ள சிறப்பான நிறங்கள் நிலைபற்றவைகளாம். எடுக்க முயலும்பொழுதில் அவை பெரும்பாலும் அழியும். அல்லாமல் தாவரத்தில் அவை இருக்கும் பிரமாணம் மிகவும் அற்பம். வெளிச்சம் அற்பமாய்ப்படும் பகுதிகளாகிய பட்டை, சிராய் முதலிய தாவரப் பகுதியில் எடுக்கும் நிறப்பதார்த்தங்கள் இந்நிறங்களினும் திலக்கம் குறைவுபடுமானாலும் மிக்க நிலையானவைகள்.

சாயமிடல்.—நிறப்பதார்த்தங்களைச் சீலை முதலியவைகளின் நெசவுகளுள் நிறம் சீக்கிரம் அழியாதபடி செறியப்பண்ணுவதே, அதாவது நுண்ணிழைகள்தோறும் நன்கு ஊடுருவிப் பரவுமாறு செய்வதே, 'சாயம் இடல்' எனப்படும். இது நிறப்பதார்த்தத்தைச் சாயமிடும் நெசவு பொருளில்பற்றி நன்கு நாட்டங்கொள்ளப்பண்ணுவதாலாகும். அந்தந்தப்பதார்த்தத்தில் செய்யப்படும் சீலை அந்தந்த நிறப்பதார்த்தங்களுக்குரிய நாட்டங்கொண்டிருக்கும். எல்லாவற்றிலும் இந்நாட்டம் கம்பளத்துக்குக் கதிப்பு; இரண்டாவதாகப் பட்டுக்கும், மூன்றாவதாகப் பருத்திக்கும், கடைசியாகச் சணலுக்கும் அதிகம். ஆகையால் கம்பளம், பட்டுகளுக்குச் சாயம்போடுவது எளிதானாலும் மற்றவைகளுக்கு இடைத்துணையின்றிச் சாயமேற்றுவது சுலபமானதல்ல.

சுயசாயம், உபசாயம்.—சாயமிடுவதில் வழங்கும் நிறப்பதார்த்தங்கள் 'சுயசாயம்' 'உபசாயம்' என இரண்டாய் வகுக்கப்படும். வேறு பொருளின் துணையின்றி தானாய் நெசவில் பிடிக்கும் நிறப்பொருள் 'சுயசாயம்' எனப்படும். 'உபசாயமோ' நிறப்பதார்த்தம், நெசவு இரண்டிலும் நாட்டம். அதாவது பற்றுடைய வேறு பொருளின் துணையால்தான் பிடிக்கும். மிகுதியான சாயங்கள் உபசாயம் என்கிற வகுப்பைச் சேர்ந்தவை. நீலத்தைத்தவிர வழமையான சாயங்கள் வேறு வேறு பொருளின் துணையின்றி தன் நிறம் கொடுப்பதரிது. பெரும்பான்மை யானவைகள் தானாய்ப்பருத்திக்கு நிலையான நிறங்கொடுக்கக்கூடிய நாட்டமுள்ளவைகளல்ல.

சாயத்துணைப்பொருள்.—சீலையில் சாயம் பிடிப்பதற்கு துணையாகும் பொருள் 'சாயத்துணைப்பொருள்' அல்லது 'மார்டெண்டு' எனப்படும். சாயமரச்சிராயால் பருத்திச்சீலையில் கறுப்புச் சாயமிடுவதைக்கொண்டு ஓர் சாயத்துணைப்பொருளின் செயலை யறிந்து கொள்ளலாம். இந்த சிராய் அவித்த தண்ணீர் கருமையானாலும் நிலையான நிறமாய் பருத்தியிற் பிடியாது. சீலையை முதல் அன்னபேதித் தண்ணீரில் தோய்த்துப் பிழிந்து பின்பு சாயமரச்சிராய்க் தண்ணீரில் தோய்க்க, அதன் நிறப்பதார்த்தம் அன்னபேதியிலுள்ள அயச்சிந்தூரத்துக்கு அதிக நாட்டமுடையதாதலால் அத்துடன் சேர்ந்து சீலையின் நெசவுகளுள் கறுப்புச்சாயமாக அடைந்து பிடிக்கும். இப்படியுண்டாகும் சாயம் சீலையின் நெசவின் வெளிப்பகுதியில் மாத்திரமிராமல் அதன் நெசவினுட்சென்று இழைமயிர்களிற் செறிந்து சீலை கெட்டாலன்றி கழலாதாதலால் நிலையான சாயம் எனப்படும். மார்டெண்டுகளை (சாயத்துணைப் பொருள்கள்) வழங்குவதால் வரும் நயம் இது மாத்திரமல்ல, ஒரே வேர்ப் பட்டையின் நிறப்பதார்த்தம் அந்தந்த மார்டெண்டு சேருவதற்குக் தகுந்தவாறு வித்தியாஸமான நிறத்தைக் கொடுக்கும். உதாரணமாக, சாயமரத்துச்சிராய் அயச்சிந்தூரத்துடன் சேர்வதால் கறுப்பும், வங்கச்சிந்தூரத்துடன் சேர்வதால் செந்நீலமும், மற்றும் மார்டெண்டுகளுடன் சேர்வதால் அததற்குத் தகுந்தவாறு கருநீலம், மஞ்சள், வெள்ளை முதலிய நிறங்களும் உண்டாகும்.

சீலையில் சாயம் அச்சடித்தல்.—சீலையை முத

லில் நன்கு வெளுத்து அச்சை சாயத்துணைப் பொருளால் தடவி அதில் அணைப்பார்கள். பின்பு சீலையை, சாயத்தில் போட, சாயம் மார்டெண்டு பட்ட பகுதிகளில் நன்றாய்ப் பிடிக்கும். பிற்பாடு தண்ணீரில் அலசும்பொழுது மற்றும் பகுதிசாயம் கழண்டுபோவதால் அச்சின் வடிவம் துவக்கமாய் நிற்கும்.

சாயமிடலில் முக்கியமாக வழங்கப்படும் நிறப்பதார்த்தங்கள் பின்வருமாறு.

சிவப்பு அல்லது செங்நீலச் சாயம்.—மஞ்சிட்டைவேர் மற்றெந்த வஸ்துவிலும் சாயமிடலில் அதிகமாய்வழங்கப்படுவதுண்டு. கறன்சின் எனப்படும் இதன் அதிகசிறப்பான நிறப்பதார்த்தம் இயல்பிலுள்ளதல்ல கந்தகாம்லத்தின் செயலால் உண்டாகும். கந்தகாம்லம் மேவரின் நிறப்பதார்த்ததுடன் பற்றாமல் அதில்படுவதால் மாத்திரம் அது மாற 'கறன்சின்' உண்டாகும். இவ்வாறு ஒரு பொருள் கூறு வடிவத்தில் யாதொருமாறுதலும் அடையாமல் வேறு இருபொருள்களை ஒன்றுடனொன்று சேர்க்கத்தக்க அல்லது மாற்றத் தக்கபற்றுடையதா யிருந்தால் அது 'யோக வாஹி' அல்லது 'கதாலிஸிஸ்' எனப்படுகிறது. இவ்வகையான செயல் சற்று நூதனமானது. இதைவிளக்கிக்காட்டுவதும் சிறிது பிரயாஸம். (சீனிகரைந்த கனமான தண்ணீரில் ஈஸ்டு என்னும் நொதிப்பொருள் மிகவும் அற்பந்தானும்சேர, அது முழுதும் நொதிப்பது இதற்கு நல்ல உதாரணமாகும்). மஞ்ஜிட்டை தன்னுடன் சேரும் அந்தந்த சாயத்துணைப் பொருளுக்குத் தகுந்தவாறு துலக்கமும் நிலையானதுமான சிவப்பு, மஞ்சள், செங்நீலம், கபிலம் என்கிற நிறங்களைக் கொடுக்கும். சிவப்புச் சாயங்களுள் மஞ்ஜிட்டை வேரல்லாமல் ஸம்பங்கிச் சிராய், சாயவேர், செஞ்சந்தணச்சிராய், செந்துருக்கம்பூ, கொச்சீனில் பூச்சி என்பவை முக்கியமானவைகளாம்.

நீலம் அல்லது வெண்ணீலச் சாயம்.—நீல நிறப்பதார்த்தங்களுள் நீலியெனப்படும் அவுரியே பிரதானமானது. அவுரிப்பூண்டின் இலைகளை இளஞ்சூட்டுத் தண்ணீரில் காய்ச்சி ஊறவைத்து கொதிக்கவிடுவதால் மஞ்சள் நிறப்பதார்த்தம் உண்டாகும். காற்றுப்படுவதால் இது சிறிது சிறிதாக நீல நிறமாக மாறி சற்றுக் கனமாய் அடையும். இந்த அடையலை தண்ணீரில் கலக்கி தெளியச்செய்து காயவைப்பதால் வியாபாரத்துக்கு வரும் ஸாதாரண நிலமாகும். நீலமானது சரிபங்கு அன்னிய பதார்த்தத்துடன் கள்ளத்தனமாய் கலக்கப்பட்டிருப்பது வழக்கம். சுத்த நீலம் புகையும் கந்தகாம்லத்தில் மாத்திரம் கரைவதுண்டு. இத்துடன் சேர்ந்து 'கந்தகநீலி காம்லம்' எனப்படும் ஓர் புளிப்புத் திரவியம் பிறக்கும். இது தண்ணீரில் தாராளமாய்க் கரையும். நீலியானது தன்னிடமிருக்கும் பிராணவாயுவை பிரிக்குந் திறமையுடைய பொருளோடும் தண்ணீரோடும் கலந்தால் 'அவுரி வெள்ளை' எனப்படும் நிறமற்றதும் தண்ணீரில் கரையக்கூடியதுமான பதார்த்தமாக மாறுகின்றது. இது காற்றுப்படுவதால் ஆகாயத்திலிருந்துப் பிராணவாயுவை உறிஞ்சி மறுபடி நீலநிறங்கொள்ளும். நீலச்சாயமேற்றும் முறை இக்குணத்திற்கு இணங்கியவாறே தானிருக்கும். மாவாக்கிய நீலியானது ஸாதாந்த்ரிதம் என்கிற பொருளுடனும், அன்னபேதியுடனும் கலந்து தண்ணீரில் மெதுவாகக் காய்ச்சப்படும். இதில் அன்னபேதியென்கிற இரும்பின் உப்பிலுள்ள கந்தகாம்லத்தை சுண்ணம் (இதுதான் ஸாதாயெனப்படும்) பிரிப்பதனல் ஆயஸாம்லஜநகாயிதம் என்னும் பொருளுண்டாகும். இதில் இருக்கும் ப்ரோடாக்ஸைட் என்பது நீலியிலுள்ளப் பிராணவாயுவை வாங்கிவிட, நீரின் நீலநிறம் அற்று மஞ்சள் நிறமாகும். இந்த நீரில் காய்ச்சும் சீலைகளை கந்தக

நீலிகாம்லநீரில் காய்ச்சவேண்டும். 'லைகென்' என்கிற மரப்பாசிகளிலிருந்து லிட்மஸ் ஆர்கில் கட்பேர் எனப்படும் நீலநிறப்பதார்த் தங்கள் க்ஷாரங்களின் செயலால் எடுக்கப்படும். (அம்லம் அதாவது புளிப்பு இனங்களுக்கு எதிரிடையான தன்மை செய்கையையுடையவை க்ஷாரங்கள் அல்லது ஆல்கலிகள் எனப்படும். இவை காரமான ருசியையும் வழவழப்புமுடையவைகள். அம்லங்கள் பட்டு செந்நிறமடைந்த தாவரபதார்த் தங்களை இவை நீல நிறமாக்கும்.) இயல்பில் தானே இம்மரப்பாசிகளில் நிறமில்லை. லிட்மஸ் நீலக்கட்டியும், ஆர்கில் கருமையான செந்நில நிறமுள்ள பாணியும், கட்பேர் கருஞ்சிவப்புத்தூளும் ஆகும்.

மஞ்சட் சாயம்.—மஞ்ச நிறப்பதார்த்தங்களுள் பஸ்திக்து சிராயும் அமெரிக்காவில் உற்பத்தியாகும் காரோக்கு பட்டையிலிருந்தெடுக்கப்படும் க்வேர்ஸிட்ரனும் ரமணச்செடியின் சிறு பழங்களும், மஞ்சளும், தென் அமெரிக்காவில் உண்டாகும் ஒருவகையான வித்தின் சதையிலிருந்து எடுக்கப்படும் அன்னட்டோ என்பதுமே மிகுதியாக வழங்கப்படும் மஞ்சட் சாயங்களாம்.

இலைமுதலியவைகளிலுள்ள நிறப்பதார்த்தம், மரங்களின் இலைமுதலியவைகளில் சேர்ந்திருக்கும் இந்த 'க்ளோரோவைல்' என்னும் நிறப்பதார்த்தம் அவைகளில் மிகவும் அற்பமாய் அகப்படும். சுத்தமாயெடுப்பது பிரயாஸம். தாவர நெசவுகளில் மெழுகுபோன்ற பதார்த்தத்துடன் சேர்ந்ததுபோலிருக்கும். இது தண்ணீரில் கரையாமல் சாராயச்சத்து, ஈதர், இவைகளில் கரையும். ஆனது பற்றி பசுமையான இலைக் காம்புகளில் செய்த பாவநத்திரவங்கள் யாவும் பச்சைநிறமாகும். வெளிச்சம் படும் தாவரப்பகுதியில் மாத்திரம் க்ளோரோவைல் என்பதுண்டாகு மாதலால் இதற்கு அதன் செயல் அவசியம் தேவை யென்று எண்ணவேண்டும். இருட்டில் வளரும் பயிர் வெளிறியிருக்கும். வெயில் பட்டால் சுறுக்கிப் பச்சை நிறங்கொள்ளும். கூதிர்காலம் கிட்ட இலைகளின் பச்சை நிறங்கெட்டு சிவப்பு மஞ்சள் நிறமாகிறது. இப்படியாவது அவைகளிலுள்ள 'க்ளோரோவைல்' என்னும் பொருள் பௌதிகரீதியாய்ப் பிராணவாயுவுடன் சேர்ந்தெரிந்து கூறுபட்டு அம்லக்கலவை யுண்டாவதால் என்று எண்ணப்படுகிறது. ஆயினும இதைப்பற்றி முடிவுகட்ட இன்னும் ஆராய வேண்டியது.

சாயமிடலில் வழங்கும் மிகுதியான பச்சை நிறப்பதார்த்தங்கள் ஆகரிகளிலிருந்தே வரும். இவைகளில் க்ரோமியம் செம்பு என்பவைகளின் உப்புகளே முக்கியமானவை.

கலப்பற்ற கறுப்பான சுயசாயம் தாவரங்களிலிருந்து எடுக்கப் படுவதாய் இன்னுங் காணவில்லை.

என்றுந் தருணனாக எப்படியிருப்பது ? ஒரு அமெரிக்கப் பெரியவர், உபவாச மூலமாக நமக்குள்ள வியாதி பீடைகளைப் பரிகரித்துக்கொண்டு, என்றும் கௌமார வயதிற்குரிய திடத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று சாதிக்கிறார். இவர் தன் விஷயத்திலேயே இவ்வாறு பரீக்ஷை செய்து பார்த்துவிட்டு இதை யெழுதுவதால், அனேகர் இதை நம்புவார்கள். 'லங்கனம்' என்பது ஔஷதங்களிலெல்லாம் உத்தமமானது, என்பது இந்த நாட்டில் வெகு காலமாக அனுபவத்தில் காணுவது. மலையாளத்தவர் இவ்விஷயத்தில் சில வைத்தியர்கள் நடத்துவதை விவரிக்கப்புகுந்தால் பெருகும். அது வெகுதூரம் போய்விட்டதாகச் சொன்னாலும், மொத்தத்தில் உபவாசம் மிதமாக இருப்பது நல்லதென்றும், அதுவும் ஈசுவரப்பிரீதியாயிருப்பது சிரேஷ்டமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

## விவசாயத்தோட்டம், பின்லே காலேஜ்

சேஷாத்திரி அய்யங்கார்

நமக்கு ஒருவர் நல்ல விஷயத்தைப் போதிக்கும்போது நல்லதென்று தோன்றினால் கேட்டதை விட்டுவிடாமல் செய்கைகளால் காண்பிக்கவேண்டுமென்கிற உறுதி மொழியைக் கடைப்பிடித்து, கனம் டேவி துரையவர்கள், 1908-வருஷக் கடைசியில், மிஸ்டர் எஸ். கே. நாயரவர்கள், வியாபார விவசாய விஷயங்களைப்பற்றிக் காலேஜில் உபன்னியாசஞ் செய்ததின்பேரில் காலேஜிலேயே ஒரு தோட்டமும் அதைச் சார்ந்து ஒரு சங்கமும் ஏற்படுத்தி, பையன்களுக்கு விவசாயஞ் செய்யக் கற்றுக் கொடுக்க, வாரத்தில் $\frac{3}{4}$-மணிநேரம் விவசாயக் கிளாஸொன்று உண்டாக்கி, ஒரு உபாயத்தியாயரும் நியமிக்க வேண்டுமென்றெண்ணிக் கருத்தை வெளியிட்டதின்பேரில், அநேகம் இந்து கனவான்கள் உதவிபுரிய வந்தனர். ஸ்ரீமத் ராவ்பகதூர் ஸ்ரீனிவாச பிள்ளையவர்கள்தான் வாரத்துக்கு ஒருதடவை வந்து சொல்லிக்கொடுப்பதாகச் சொல்லி விவசாயப் புத்தகங்கள் வாங்க ரூ. 50. கொடுப்பதாக வாக்களித்தனர். மற்றொரு இந்து கனவான் பள்ளிக்கூடத்துக் கருகாமையிலுள்ள தன் தோட்டத்தைப் பையன்களுக்கு வேலை செய்யக் கொடுத்தனர். விவசாயச் சங்கம் ஏற்படுத்தியவுடன் சுமார் 40-மெம்பர்கள் சேர்ந்தார்கள். சங்கத்தின் அங்கத்தவர்களாவதற்கு 6-மாதத்திற்கு அணா 4 கொடுக்கவேண்டும். இம்மெம்பர்கள் சில உபாத்தியாயர்களை அதிகாரிகளாக நியமித்துக் கொடுக்கப்பட்ட நிலத்தை 15-அடிச் சதுரம் சதுரமாகத் துண்டுபோட்டு தலைக்கு ஒன்று எடுத்துக் கொண்டு மிச்சமுள்ள நிலத்தைப் பிரைமரி பையன்களுக்கென்று விட்டு விட்டார்கள். அவ்விடத்தில், ஏற்கனவே யிருந்த கிணற்றைக் கட்டிப் பூட்டை போட்டு தண்ணீரிறைக்கும் நிலைக்குக் கொணர்ந்தனர். தண்ணீர் மதுரமாயிருந்தமையால் சுற்றுள்ள ஜனங்கள் அங்கேயே தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர்.

விவசாயத்துக்கு வேண்டிய மண்வெட்டி, வாளி, தண்ணீர்பாய்ச்சத் தகரச்சட்டி முதலியவைகள் வாங்கிக்கொடுக்கப் பையன்கள் வேலை செய்ய ஆரம்பித்தனர். இச்செலவுக்கு துரையவர்கள் கொஞ்சம் பணம் கையிலிருந்து போட்டார். பையன்கள் தங்கள் நிலத்தைக் கொத்தித் தண்ணீர்பாய்ச்சி விதைபோடுவதற்குத் தயாராக்கின தருணத்தில், அவர்களுக்கு விதைகள் வரவழைத்துக் கொடுக்கப்பட்டது. உபாத்தியாயர்களும், புரபசர்களும், உடுப்புகளைக் கழற்றிவிட்டு, மண்வெட்டி பிடித்து, பையன்களோடு சேர்ந்து நிலத்தைக் கொத்தி வேலை செய்கிறதானது, மாணுக்கருக்கும் உபாத்தியாயருக்குமுள்ள நட்பை நன்கு விளக்குகிறது.

தோட்டத்திற்கு மாதம் ரூ. 4 கொடுத்து ஒரு காவற்காரன் நியமிக்கப்பட்டு அவன் தோட்டத்தில் ஆடு மாடுகள் வராமலும், பையன்கள் லீவ்காலத்தில் ஊர்களுக்குப்போகிறபடியால், தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும்படியாகவும், காய்கறிகளை ஒருவரும் திருடிச் செல்லாமலும் காக்கும்படி ஏற்படுத்தப்பட்டான். பையன்களும் உபாத்தியாயர்களும் வீட்டிலும் தெருவிலுமுள்ள ஆட்டு மாட்டு எருமுதலியவைகளைச் சேர்த்து அவரவர் நிலத்தில் போட்டு உரப்படுத்தினர்கள்.

இப்படியாக கத்தரி, சீமைத் தக்காளி சோளம், அவரை, புடல், மிளகாய், மஞ்சள், வெங்காயம், வெள்ளரி, வெண்டை, வாழை முதலியவைகள் போடப்பட்டு மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. விளையும்

பதார்த்தங்கள் யார் நிலத்திலிருந்தாலும் பறித்து ஏலத்தில் விடப்படுகிறது. இப்படி இதுவரையில் 7, 8, ரூபாய் சேர்ந்ததின்பேரில் செழுமையாக நிலத்தை வைத்துக்கொண்டதற்காக இரண்டு பையன்களுக்கு விவசாயத்திலுள்ள பூச்சிகளைப்பற்றி எழுதிய 2-ரூபாய் விலையுள்ள புஸ்தகங்கள் பரிசு அளிக்கப்பட்டது.

தவிர, பிரைமரிப் பையன்களுக்கு விவசாயம் சொல்லிக்கொடுப்பதற்காக வைத்துள்ள நிலத்தைத் துண்டுகளாகப்போட்டு ஒவ்வொரு பையன்களுக்கும் கொடுக்கப்பட்டது. பிரைமரிப் பையன்கள், மெம்பர்களாவதற்குப் பணம் கொடுக்கவேண்டியதில்லை, அவர்களுக்கென்று, சிறு நோட்டுகள் இனமாகக் கொடுக்கப்பட்டு, அவர்கள் உபாத்தியாயர்கள் நிலங்களை விதைத்துப் பையன்களைக் கவனிக்கும்படி செய்து, தினந்தோறும் அவரவர்கள் நிலத்தில் தண்ணீர் பாய்வதையும் விதைகள் முளைத்திருப்பதையும்பற்றி எழுதும்படி செய்யப்படுகிறது. இப்படியாக $1\frac{1}{2}$-வருஷகாலமாக நடந்துவருகிறபடியால், பையன்களுக்கு விவசாயத்திலுள்ள விஷயங்கள் பல தெரிந்திருக்கிறது. இதேமாதிரி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பையன்களுக்கு ஒருவித ஆவலுண்டாக்கப்படுமாயின் நமது விவசாயம் ஒருவாறு நன்னிலைமைக்கு வருமென நம்புகிறோம்.

ஹாலி தூமகேது கொஞ்சநாளாகக் கண்ணுக்குக் கண்டு வருகிறது. சென்ற ஏப்ரல் மீ 18-தேதி தான் அது வெகு தீவியமாய்க் கண்டிருக்கவேண்டும். ஆனால் கணிதமப்படியானலும், அனுபவப்படி அதற்குப் பிறகுதான் அது வெளிச்ச மதிகரித்துக் கண்டு வருகிறது. விசேஷமாக ஒன்றும் நேரிடவில்லை.

## என்னுடைய ஜன்ம பூமிக்கு நான் எப்படி உபகாரியாயிருப்பது?

ஸ்ரீமான் பாதிரியார் ஸி. எப். ஆந்திரூஸ், எம். ஏ., அவர்கள்

['யூனைடேட் இந்தியா' பத்திரிகைக்காக மேற்கண்ட மகுடத்துடன் ஷெ பாதிரி நண்பர் தொடராகச் சில வியாசங்கள் எழுதிவந்திருக்கிறார். அதில் இது முதலாவது. இந்த வியாசத்தில் காணும் ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு அபிமதமாயிருப்பதுபற்றி, 'விஹாரிணி' அபிமானிகளுக்கு இதைச் சந்தோஷத்துடன் சேர்ப்பித்திருக்கிறோம்—எடி.]

பள்ளிக்கூடங்களில் படித்துவரும் மாணாக்கரும், எனக்குக் கடிதம் எழுதிவரும் வேறு அனேகரும் என்னை அடிக்கடிக் கேட்கிறார்கள், 'ஐயா, என் ஜன்ம பூமிக்கு நான் எப்படி நற்காரியம் செய்து திருப்திபடுவது?' என்று. இக்காலத்தில் அனேகமாய் ஜனங்களெல்லோருக்கும் இந்த எண்ணம் அதிகமாகியே வருகிறது. அதிலும் குமாரர்களாயிருப்பவருக்கு இவ்விஷயத்தில் ஆக்கிரகம் வெகு அதிகம். ஆனால் இவர்களனைவருக்கும் எண்ணியபடி நடப்பதுதான் பிரயாசமாயிருக்கிறது.

இந்த வியாசத்தில் இனிக்காணுவதெல்லாம் சிலருக்கு வெகுசாமான்னிய மென்றே படும். அப்படித்தானிருப்பதாகஙானும் ஆலசியமின்றிச் சொல்லிவிடவேண்டும். இதில் அதிசயமாக வொன்றும் தெரிவிக்க வரவில்லையென்றே நான் சொல்லிவிடுகிறேன். லௌகிக காரியங்களெல்லாம் அனேகமாயிப்படித்தானிருக்கின்றன. அவைகளில் ரகசியமுமில்லை, விந்தையாகவும் ஏதாவது இருப்பதாகக் காணவில்லை. ஆனால் இக்காரணங்கொண்டு அவைகளைக் குப்பையென்று ஒதுக்கி வைப்பதற்கில்லை.

தவிர என்னைக் கேட்பவருக்கு ஏதாகிலும் உதவட்டுமென்று எழுதுவதில், 'நான் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்பவர் அனேகமாய் நடுத்தரமான புத்தியும், யுக்தியும், கல்வியுமுடையவரென்று எனக்குக் காணுவதால் அவர்களுக்காகவே நான் இதை யெழுதுவது. புத்தியும், யுக்தியும் அபாரமாய் நிறைந்திருக்கும் 'அபூர்வ வஸ்துக்களுக்கு' எழுதி யுபதேசிப்பதில் விசேஷ பிரயோஜனம் இல்லை. ஏனெனில் அவர்கள் தமக்கு வேண்டும் நெறியைத் தாமாகவே கண்டு கொள்வார்கள். ஆதலாலவர்களுக்கு மார்க்க தரிசியாக ஒன்றும் வேண்டியது இல்லை. ஆகவே நான் எழுதுவது சாமான்னியருக்காக வேண்டியே தான். அவர்களில் அனேகமாய் எல்லோரும் வயிறு வளர்ப்பதற்காக மெத்தவும் பாடுபட்டு உழைப்பவர்கள். ஏதோ கொஞ்சம் ஒழிவுகிடைத்த காலத்தில், ஜன்மபூமிக்கு ஏதாகிலும் உபகாரம் செய்யவேண்டுமென்று அவர்களுக்குக் காணுகிறது. அந்த ஒழிவை எப்படி நன்றாயுபயோகிப்பது? இதற்குத்தான் அவர்கள் வகைதேடுவது.

இம்மாதிரி ஜனங்களுக்கு நான் முதற் சொல்லுவது இது. 'முதன் முதல் இந்தியாவைப்பற்றி உமக்கு வேண்டியதைத் தெரிந்து கொள்ளும். அதுதான் சரியான ஆரம்பம். இந்தியாவின் தற்காலஸ்திதி யென்னவென்று கண்டுகொள்ளவேண்டும். 'அமைச்சனது ஆண்டுநூல்' * போன்ற புஸ்தகம் இரண்டொன்றையெடுத்து, அதில் உலகத்திலுள்ள பல தேசங்களையும்பற்றி யெழுதியிருப்பதை ஜாக்கிரதையாகப் படிக்கவேண்டும். இப்படிப் படித்து, அந்தந்தத் தேசத்தின் ஜனத்தொகை, மதம், ஆசாரம், துரைத்தனம், வியாபாரம், கல்வி, முதலியவற்றிலுள்ள வர்த்தமான தசையை விசாரிக்கும்பொழுது, பல விஷயங்களைப்பற்றித் துக்கப்படவேண்டித்தாயிருக்கும். இருந்தாலும் சில விஷயங்களில் உற்சாகமும் சந்தோஷமுமடையக் காரணமுங் காணும். இப்படி ஜாக்கிரதையாய்ப் படித்து வருவதில், இந்தியர்களுக்கு இனி வருங்காலத்தில் என்னவாகுமோ என்கிற பிரமை சற்று மாறும். அது மாறிக் காலக்கிரமத்தில் எல்லா நன்மையும் அடையலாமென்கிற உற்சாகமும் உண்டானால், அதனால் இத்தேசத்திற்கு இவ்வளவு நன்மைதானுண்டாகுமென்று வரையறுக்க யாராலு முடியாது. வாஸ்தவமின்னதென்று செம்மையாய்த் தெரியுமிடத்து, மனதிலுள்ள தப்பெண்ணம் ஓடும். இருக்கும்ஸ்திதி விளங்கினால், மேல் நடக்கவேண்டிய காரியமும் அவர்களுக்குக் கிரமமாகப் புலப்படும்.

தற்கால ஸ்திதியை அறிந்து வரும்பொழுதே, முற்கால ஸ்திதியையும் நன்றாயறிந்து வரவேண்டும். இதை வேண்டுவோர் இந்தியாவின் மூன்று பிராசீன தசைகளைக் குறித்து வாசித்தல் தகும். அவையாவன, 'பிராசீன ஆரியாவர்த்தம்,' ஒன்று, இந்தியாவில் புத்தமதம் பிரபலித்திருந்ததசையொன்று, பிறகு மகம்மதீயர் ராச்சியபாரம் செய்ததசை யொன்று. இவ்வாறாக இம்மூன்றையும் பற்றி நாம் வேண்டியதை யறிந்து கொண்டால், பழைய காலத்தில் இந்தியா இப்படியிருந்தது, அப்படியிருந்தது, என்று வீண்பேச்சைப் பேசி, அர்த்தமில்லாமல் எழுதி, வருவதை விட்டு, இந்தியாவிற்கு உள்ள பெருமையை உள்ளபடி யறிந்துகொண்டுமேல்நடக்கவேண்டுவதை யோசிக்கலாம்.

பழையகதையை நன்றாயறிந்துகொண்டால், வாஸ்தவமாகநடந்ததுஇன்னதென்றும்,வெறுங்கதைஇன்னதென்றும்விவேகபூர்வமாய்த்தெளியலாம். இங்கிலாந்திலும் இப்படித்தான்எங்கள் கதைகளைநாங்கள்பகுத்தறியவேண்டியிருந்தது சென்ற நூறுவருஷங்களாக நாங்கள் சிரமப்பட்டு, ஐரோபாவில் முன்னாட்களில் பிரபலமாயிருந்த கிரேக்கர், ரோமர், ஆங்கிலேயர் முத

* Statesman's Year Book.

லிய சகலருடையவும் சரித்திரங்களை யுக்தியுக்தமாகத் தெரிந்து எழுதிக்கொண்டோம். இந்தியாவிலும் இக்காரியம் ஆகித் தீரவேண்டும். செய்துவந்தால், காலக்கிரமத்தில் நயமே யொழிய நஷ்டமில்லை. இந்தியாவின் பழைய தசைகளெல்லாம் நமக்குத் தெளிவாகி, ஜனங்களுக்கிருந்த கஷ்டநிஷ்டூரங்கள் எப்போதும் ஒருவகைத்தென்பது விளங்கி, எல்லாம் மானுஷியமென்று காணும். அப்படிக் காணுமிடத்து, ராக்ஷசர்களையும், தேவதைகளையும பற்றிப் பதர்ப்பேச்சுநிற்கும்மகாஜனங்களுக்குப்பொதுவாயுள்ள கஷ்டநிஷ்டூரங்களை நாம் கவனித்துத் தாரதம்மியங் காணலாம்.

இப்படி நடந்ததையும், நடப்பதையும் நன்றாயறிந்தவருக்கு, இந்தியர்களுடைய ஆசாரம், குணம், புத்திவிபவம், இவைகள் வெளியாகி விடுவதால், இருவகையிலும் நன்மை கிடைக்கும். ஒன்று, இந்தியாவிலுள்ளதை யெல்லாம் இகழ்ந்து, மேனாட்டாருடைய நடை, உடை, பாவனை, மதம், ஆசாரம் முதலிய யாவற்றையும் புகழ்ந்து, நாமும் அவ்வாறு எல்லா விஷயத்திலும் மேனாட்டு வேஷமே போட்டுத் தீரவேண்டுமென்று குதிப்பதும் நின்றுவிடும். மற்றொருபுறம் அனேகர் நின்றுகொண்டு, வெளியிலிருந்து வருவதெல்லாம் அனர்த்தகரமென்றுபயந்தும், பயமுறுத்தியும், ஜனங்களை முன்னுக்கு வரவொட்டாமலும், கைகாலாடவொட்டாமலும், அடித்து வெருட்டுவதும் நின்றுவிடும். இவ்விரண்டு முரட்டு வழிகளிலும் ஜனங்கள் போவதில்லையானால், இந்தியாவில் நலமாயுள்ள ஆசாரங்களையும், மதங்களையும் திடப்படுத்திக் கைக்கொண்டு, வேண்டாதவைகளை நீக்கி, எந்நாட்டுக்குரியனவாயினும், நன்மை பயப்பனவாகிய வழிகளைப்பற்றி மகாஜனங்கள் முன்னுக்கு வர ஏது உண்டாகும். 'கருவிபிட்டாற்றுவார், புண்வைத்து மூடார் பொதிந்து' என்று பெரியோர் சொல்லியது வாஸ்தவமாம்.

சென்ற ஐம்பது வருஷகாலமாக இந்திய மகாஜனங்களுக்கு அவர்களுடைய பெரிய தனக்காரராலேயே வெகு உபத்திரவமுண்டாகி வந்திருக்கிறது. ஏனெனில் இப்பெரிய தனக்காரரில் அனேகர் பெரிய தனத்திற்கு வேண்டியனவாக நாம் மேற்கூறிய யோக்கியதையைச் சம்பாதிக்காமற் பிரவேசித்ததால் தான். முதல்தரம் பெரிய தனக்காரராகிய ரானடே, வித்தியாசாகரர், முதலியோரைக் குறித்தல்ல நாமிப்போது பேசுவது. சாமான்னியப் பெரிய தனக்காரரைக் குறித்தென்றறிதல் வேண்டும். இவர்களில் அனேகமாய் எல்லோரும் புலியைப்பார்த்து நரி சூடிட்டுக்கொண்ட கதையாக, எவ்விஷயத்திலும் ஐரோப்பிய வேஷந்தரித்து, இருவகையாருக்கும் ஆகாதவராகிப் பற்றுவிட்டுப் பாழாய்ப் போயிருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், இந்தியர்களுக்குள் ஒருவிதமான 'ஐரோப்பிய சுரம்' பிடிபட்டு அவர்களை ஆட்டிவிட்டதில், மறுபடி சுரம் தெளிந்தபின், கைகால்களுக்கு வலிமை குறைந்து தேகம் மெலிந்ததொன்று தவிர வேறுபயன் அதனால் உண்டாகவில்லை. 'தில்லை கோவிந்தன்,' என்னும் புஸ்தகத்தைப் படிப்பவருக்கு இது விளங்கும். இப்படி யாவதினால், மேனாட்டில் நலமென்று காணும் ஆசாரங்கள்கூட இவ்விடத்தில் வந்து வேரூன்றுவது பிரயாசமாகிவிட்டது.

இப்படி நடப்பதற்கு மாறாக, ஒவ்வொரு இந்தியனும், தனது தேசசரித்திரத்தை நன்றாகப்படித்தறிந்திருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இந்தியாவின் தற்கால ஸ்திதியையும், மற்றதேசங்களுக்கும் அதற்குமுள்ள தாரதம்மியங்களையும் அறிந்திருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இப்படி யாகும்போது, அவனுக்குத் தன் ஜன்ம பூமிக்குப் பழைய நாளில் இருந்த நல்லதசைகளைப்பற்றி வேண்டியவளவிற்குப் பெருமைப் படுவதற்கும்,

அதற்கு வாஸ்தவத்தில் உள்ள மகிமையைப் பகுத்தறிவதற்கும், இடமுண்டாகும். அதனால் மேனாட்டுச் சம்பிரதாயங்கள் இங்கு வரும்போதெல்லாம், அவன் அவைகளுக்குஉடன்பட்டுச் சும்மா இருக்கமாட்டான். அவற்றில் வேண்டாதனவற்றை வரவொட்டாமல் தடுக்க முயல்வான். நல்லது வந்தாலோ, அதைச் சந்தோஷமாய் உபசாரத்துடன் வரவழைப்பான். இப்படித்தான் எல்லோரும் நடக்க வேண்டும்.

இதற்கு உதாரணமாகச் சில விஷயங்களை அடுத்தமுறை விசாரிப்போம்.

---

இந்த வருஷம் மலையாளி நாயர்குலத்திலுதித்த ஸ்ரீமதி பாருகுட்டி அம்மாள் பி. ஏ. பரீக்ஷையில் தேறி பரிசுகளும் பெற்றது வெகு விசேஷமாம். இந்த அம்மாள்தான் முதல் நாயர்ஸ்திரீ பி. ஏ. இவர் திருவாங்கூர் சமஸ்தானத்திய காலேஜில் படித்துத் தேறியவர். ஆதலால் திருவாங்கூரில் புத்தியும், உழைப்புமுள்ளவர்கள் படித்துச் சீருஞ் சிறப்புமாயிருக்க வகையேற்படுத்திய சத்திரபதி மகாராஜாவுடைய உபயமும் அம்மூலியமாக முன்னுக்குவரும் ஸ்திரீ வித்தியார்த்திகளும், மேலுமேலும் சிறப்படைந்து, தமது நாட்டாரைக் குறித்து இதரர் கூறங் குற்றங்களைக் குறைத்து, குணங்களைக்கூட்டி, எல்லோருமெச்ச வாழவேண்டுமென்பது நமது கோரிக்கை. மலையாள ஸ்திரீகளுடைய ஆமோதனமிருக்குமாகில் மருமக்கதாயமும் அதன் துர்லக்ஷணங்களும் இத்தனை காலம் செழித்திருக்குமா?

ஹாலி தூமகேது முதன்முதல் கலியுகம் பிறந்தவுடன் தோன்றியதாகவும், இன்றையவரை 66-முறை தோன்றியிருப்பதாகவும் இலங்கையில் ஒரு ககோளசாஸ்திரி உபந்யாசம் செய்தாராம். தூமகேதுக்கள் வந்தால் ஏதாகிலும் உற்பாதங் காணவேண்டுமென்று நமது ஜனங்கள் வெகு நாளாக எண்ணிவந்திருப்பதில், சென்ற 65-முறைகளில் நடந்த உற்பாதங்கள் இன்னவையென்று நமக்குத் தெரியாது. பிரகிருதத்தில்மட்டும் ஒருவகை யுற்பாதங் காணுகிறோம். ஹம்பி ஜகத்குருதலாய் லாமாவுக்கு முகமன்கூறி மதவிரோதத்தைத் தொலைப்பதாகக் கூறியதும், ரோமன் போப்பு அமெரிக்கக் கோட்டீசுவரனேகர் பிராடெஸ்டாண்டு கிறிஸ்தவராயினும் நீடூழி வாழவேண்டுமென்றும் நற்கதி யடையவேண்டுமென்றும் ஆசீர்வதித்ததுமேயாம். ஆனால் இவ்வுற்பாதங்களால் நன்மையே தானுண்டாகவேண்டுமோகக் காணுகிறது.

## திருக்குறள் விஷய விமர்சனம்

ஸ்ரீமான் பண்டிதர், எஸ்.
வேங்கடரமணய்யர்.

(270-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விஷயத்தை யபேக்ஷித்துப் பார்க்குங்கால், இந்நூலுக்குச் சமதையாகக் கூறுவதற்கு இந்தியாவில் வேறு பாஷைகளில் நூலில்லையென்றே தாராளமாய்ச் சொல்லலாம். வடமொழியில் மட்டும், இதர விஷயங்களில் பர்த்துருஹரி நீதிசதகத்தையும், மதவிஷயத்தில் ஸ்ரீபகவத் கீதையையும் சொல்லலாம். என்றாலும் நடைவிஷயத்தில் நீதிசதகத்திற்கும், குறளுக்கும் வெகுபேதம். பர்த்துருஹரி நடைகேட்க வெகு இனிப்பென்பதற்குத் தடையேயில்லை. ஆகிலும் 'கடுகைத்துளைத்ததாகிய' பெருங்காரியம் குறளுக்கு மட்டுமே சிறந்துள்ள லக்ஷணமாம். சொற்சுருக்கம் இனி இதிற்காணுவதைவிட விசேஷித்துக்காணுதல் அரிது. தவிர மற்றோர் விஷயத்தில் பர்த்துருஹரிக்கும் நாயனாருக்கும் வேற்றுமைகாணும். தன்னுடைய மதத்தைப்பற்றிப் பேசுகையில் வடமொழிப்புலவர் இவ்வாறு கூறியிருக்கிறார்:— "இவ்வுலகங்களுக் கெல்லாம் அதிபதியான மகேசுவரன் விஷயத்திலும், இவற்றிற்கு அந்தராத்துமாவாகிய ஜனார்த்தனன் விஷயத்திலும், எனக்கு வாஸ்தவத்தில் பேதமென்பது காணுவதில்லை. என்றாலும் எனக்குச் சந்திரசேகரனிடத்தில் தான் பக்தி பெருகுகிறது," என்று.

நாயனாரோ இவ்விஷயத்தில் யாராலும் அசைபடாவண்ணம் எழுதிவிட்டு வேடிக்கை பார்க்கிறார். கடவுள் வாழ்த்தையெடுத்துவியவகரித்தால், அவரவர் மனோதருமத்தையனுசரித்து சைவ, வைஷ்ணவ, புத்த, ஜைன, கிறிஸ்தவ, மகம்மதீய மதஸ்தர் யார் வேண்டுமென்றாலும் நாயனாரைத் தமதுமதஸ்தராக்கிவிடலாம். அப்

படியேதான் இவ்விஷயத்தில் வழக்குத்தொடர்
ந்தும் வந்திருக்கிறது. ஜைனர்கள், 'மலர்
மிசையேகினன்,' என்பதுகொண்டு குறளைத்
தமது நூலாக்கியுள்ளர். அப்படியே ஏனை
யோரும். ஆனல் நாம் மேற்குறித்தபடி சமரச
மாகக் குறளில் காணும் விஷயங்களைப் பெரும்
படியாக விசாரிக்குமிடத்து, நாயனர் வேத
சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டு, உபநிஷத்து
மார்க்கத்தைக் கைகொண்டவரென்று மட்டும்
கூறுதல் சாத்தியம்.

உதாரணமாகக் 'கடவுள் வாழ்த்து' என்
னும் அதிகாரத்திலடங்கிய பத்துக்குறளையும்,
பரிமேலழகர் தந்திருக்கும் உரையினது உதவி
யைக்கொண்டு சுருங்க விசாரிப்போம். "எழுத்
துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன;
அதுபோல உலகம் ஆதிபகவனகிய முதலை
யுடைத்து," என்பதை முதனூல் காணுது
ஆராயுமிடத்து, எந்த மதஸ்தர் வேண்டுமா
னலும் தமதாகக்கொள்வதுசாத்தியம். ஆனல்
முன் பின் வருவனவற்றை யொட்டிபார்க்கு
மிடத்தோ, இக்குறளில் முதற் பகுதியைப்
பகவத்கீதையிலும், மற்றதை வேதாந்த சூத்
திரம், என்றுல், தைத்தரீய முதலிய உபநிஷத்
துக்களிலும் தெளிவாகக் காணலாம். அப்படி
யே இரண்டாவது குறளைப்புத்தமததிராகரண
மாகவும், மற்றவைகளைப் பக்திமார்க்கத்தை
நன்கு விளக்கி, சுவர்க்க முதலிய காமியங்களைக்
கண்டித்து, பரமபுருஷனைப்பஜித்து, அம்மூல
மாக அமிருதத்துவம்பெற்று, சமுசாரசக்கரப்
பிரமையை யொழித்து விடுவதற்கு ஏற்ற
னவாகவும் கொள்ளல் வேண்டும். 'மலர்
மிசையேகினன்,' என்பதும், அவ்வாறே
ஸ்ரீ நாராயண உபநிஷத்துபோன்ற இடங்க
ளில், 'ஹிருதயமாகிய புண்டரீகம்' என்று
வருணிக்கப் பட்டிருப்பதை விளக்க வந்த
தென்று உரையாசிரியர் கொண்டது வெகு
சரியென்பது விளங்கும். "அன்பானினை
வாரது உள்ளக்கமலத்தின் கண் அவர் நினைந்த
வடிவோடு விரைந்து சேரலின்," என்றதனல்,
ஸ்ரீ பகவத் கீதையில், "எந்தெந்த ரூபமாகப்
பக்தன் என்னைக் சிரத்தையுடன் அர்ச்சிக்க
விரும்புகிருனே" என்று ஆரம்பிக்கும் சுலோ
கத்தை விளக்கியதாயிற்று. அப்படியே 'அவிச்
சையை இருள்' என்றதற்கு, 'இன்னதன்
மைத் தென ஒருவராலும் கூறப்படாமை
யின்,' என்றதால் கீதையில், 'என்னுடைய
மாயை இத்தன்மைத்தென யாருஞ் சொல்ல
முடியாதது' என்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்ன
தை மொழிபெயர்த்ததாயிற்று. 'எண்குணத்
தான்' என்பதைச் சைவர், ஜைனர் முதலியோ
ரும், 'அஷ்டாக்ஷர மூர்த்தி' என ஸ்ரீவைஷ்ண
வரும் தமது உபாசன மூர்த்தியாகப் பாவிக்க
லாம். ஆனல் முந்திப்போகியதையும், பிந்தி
வருவதையும், ஆராயுமிடத்து, முரட்டுவாதத்
திற்குத் தேவரிடங் கொடுப்பதில்லை யென்பது
நன்குவிளங்கும்.

இவ்வாறு திருக்குறளில் காணும் ஒவ்வொரு
முக்கியக்கருத்தும் மேற்கோளின்றி யமைவத
ல்லவென்று மூலத்தினுலும், அதற்கு 'உச்சி
மேற்புலவர் கொள்ளும்,' அழகர் உரையினு
லும், ஏற்படுவதால், ஒருவிஷயம் பிரசித்த
மாகிறது. அதாவது நாயனர் கருத்தை நன்
கறியவேண்டுவோர், அவரது கிருதியைமட்
டும் படித்துவிட்டுப் பிறகு தமது யுக்தி
யையும், பிடிவாதத்தையுமே பிரமாணமாகக்
கொண்டு கக்ஷிபேசுதல் பெரிய அனர்த்தத்
திற்குக்காரண மாவதன்றிப் பயன்றருவதல்ல
வென்பது. ஆதலால், ஓ விவேகிகளே, தமி
ழில் சிரேஷ்டமாகக் கொள்ளும் திருக்குறள்
மட்டுமேயன்றிப் பழங்காவியங்களையும் நன்கறி
யவேண்டுவோர், அந்தந்தக்கிரந்த கருத்தருக்
கிருந்த யோக்கியதையில் ஏகதேசமாவது
பெற்றுத்தான் பலனடையவேண்டும். அவ்
வாறு செய்யாததனிமித்தமே கணக்கிறந்த
கக்ஷிகளுக்கும், வீண்வாதங்களுக்கும், பதர்ப்
பேச்சுக்கும் இடமுண்டாகிறது. இம்மாதிரி

யனர்த்தங்களுக்குச் 'சுத்தத்தமிழர்'காரணம். 'சுத்தத்தமிழ்' நூல்களிருக்குமாகில், அவற்றிற்கு இந்த நியாயமில்லை. ஆனாலப்படிபட்ட நூல்களில்லை யென்றே நிச்சயமாயக்காணுவதால், இருப்பவைகளை நேராயறிவதற்கு 'வடமொழிப் பொறாமையை, விட்டு, ஒவ்வொருவரும் வடமொழி சிறிது கற்று நற்பயனடைவதே விவேகமென்று தாராளமாய்ச் சொல்லலாம். அப்படியில்லாதவரை குறள் முதலிய கிரந்தங்களுக்குப் பொருளுரைப் போருங் கேட்போரும் யானைகண்ட குருடரைப்போல வாதாடி வீண்கால க்ஷேபஞ் செய்வது பிரத்தியக்ஷம்.

இது நிற்க, இவ்வளவு பெருமை வாய்ந்துள்ள இந்நூலை நாம் இக்காலத்தில் என்ன செய்கிறோம்? பண்டிதராயுள்ளோர் ஒவ்வொரு குறளும் 'எழுகடலை யடக்கிக்கொண்டிருப்பதாக' எப்போதாகிலும் சொல்லிவிட்டு, குறளுரைக்கும் கருத்திற்கும் வேண்டாப் பேச்சை வேண்டியமட்டில் பேசி வருகிறார்கள். பீ. ஏ. பரீக்ஷை மாணாக்கர் சிலர் மட்டும் வருஷத்திற்கு நூறுகுறள், ப-அ. உரையுடன் ஏதோ ஒருவாறுப் படித்துவிட்டுக்கூடிய சீக்கிரத்தில் மறந்து விடுகிறார்கள். 'விஹாரிணியில்' ரஸப்பிரகரணத்தைப் பற்றிப் பேசியவிடத்து ஸ்ரீமான் தேசிகாசாரிய சுவாமிகள், இதர காவியங்களுக்குச் சொல்லிய 'சுபலக்ஷணங்கள்' இதற்கும் நன்றாய்ப் பொருந்தும். மொத்தத்தில் கிரந்தத்தைப் பற்றி மாணாக்கருக்கேதாகிலும் தெரிதல் நலமென்கிற எண்ணமே கற்பிப்போருக்கில்லை யென்றால், மாணாக்கருக்குக் கிரந்தவிஷயத்தில் ருசியற்றிருப்பது அதிசயமல்லவே. இதை மற்ற காவியவிஷயத்தில் எப்படியோ போகட்டுமென்று விட்டாலும் விடலாம் ஏனெனில், காவியங்களைப் படித்து அவற்றிலுள்ளதை யுள்ளப்படி யறிந்து ரஸமனுபவிப்பது, உலக வாழ்க்கையில் பல விதத்திலும் அடிபட்டு அனுபவமுதிர்ந்த பெரியோர் தாமாகப் படித்து, ஆராய்ந்து, மனனம் செய்வதாலேயே உண்டாவதன்றி ஒருவர்புகட்ட வருவதன்று. அவ்வாறு அனுபவிக்கத் துணைக்கருவிகளான வியாகரணம், நிகண்டு முதலியவற்றையும், தர்க்கம் முதலிய சாஸ்திரங்களையும் மட்டுமே நாம் பிறர்மூலமாகக் கற்றறியவேண்டுவது அவசியமாம். இவைகளைக்கற்று லௌகிகத்தில் அனுபவம் முதிருமளவிற்குக் காவிய விஷயத்திலடையக்கூடிய இன்பம் தானாகவே வரவேண்டுவதே யாதலின், அது பிறர், 'இதோ சொற்சுவை,' 'இதோ பொருட்சுவை, 'அதோ சோகம்,' 'அதோ வீரம்,' என்று கூவுவதால் உண்டாவதன்று.

ஆகையால் திருக்குறள் சாஸ்திரமாதல்பற்றி அதைக்கற்றவர் மூலமாகக் கேட்டுத்தான் அதன் பெருமையறிதல் சாத்தியம். கேட்பவரோ இக்காலத்தில், குரு நலவாசஞ் செய்து, ''செவி வாயாக, நெஞ்சு கன்னாகச் சித்திரப் பாவையினத்த கவடங்கி,'' க்கற்கும் மாணாக்கரல்ல. பாடம் சொல்லுவோரும் அனேகமாய்ப் பூரணபண்டிதரன்று. ஆகவே குறளுக்குத் தூர்த்தசை யிருவாறான மேலிட்டு வந்திருக்கிறது.

போனபடி எக்கேடோ கெடட்டுமென்று விடலாமென்றால், நாயனார்கூறும் விஷயங்கள் அனேகமாய்ப்பண்டிதர், பாமரர் எல்லோருக்கும் சுகிர்தஞ் செய்யக்கூடியவை. 'பாலொடு தேன் கலந்தற்றே' முதலிய காமத்துப் பாற்குறளைச் சாமான்னியருக்கானவையன்றென்று தள்ளிவிட்டாலும், அறம், பொருள், இவ்விரண்டு விஷயங்களைப் பற்றி நாயனார் கூறியிருப்பதைத் தமிழ் படித்ததாகச் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவருமறிதல் வெகு நலம். அதிலும் இக்காலத்தில் 'அரசு'விஷயத்தைப்பற்றிப்பலர் பலவிதமாகப்பேசி வருவதில் அவ்விஷயத்தில் இத்தமிழ் முதல்வர் என்னசொல்லுகிறாரென்

பதை நம்மில் பெரியோர், சிறியோராகிய நல்லோர் யாவரும் அறிதல் வெகு அவசியம், ‘அறம்’ என்பது, இந்து, மகமதீயன், கிறிஸ்தவன், ஆசியாக்காரன், ஐரோப்பியன் முதலிய சகலருக்கும் பொதுவாகச் சிறந்து நிற்றலின், விவேகிகளனைவருக்கும், எக்காலத்திலும் சிரமேற் கொள்ளவேண்டிய விஷயம்.

ஆதலால் திருக்குறள், பண்டிதருக்கு மட்டும் புதைபொருள் கண்டுபிடித்து ஆனந்திக்கவேற்பட்ட ரகசியக் கிரந்தமன்று. பண்டிதர், பாமரர், எல்லோருக்கும் உதவவேண்டிய பேருடைமை. அப்படியாயின் அதை யெல்லோருக்கும் எப்படிச் சேர்ப்பிப்பது? மேற் கூறியபடி கற்போர்தாமாக வருந்திக் குருவிடத்திற் பாடம் கேட்கப் போவதுமில்லை. அங்ஙனம் வழிப்பட்டுப் பிரயோஜனமடையக்கூடிய குருக்கள் மாரும் அனேகமாயில்லையாக, வேறுள்ள மார்க்கம்யாது? பத்திரிகை வாயிலாக ஏதோ சிறிது சிறிதாக எழுதியும் பேசவல்லோர் ஆங்காங்கு பிரசங்கித்தும் வருவதுதான் நமக்குக்கைவசமாயுள்ள சாதனங்கள்.

சமீபத்தில் ஸ்ரீமான் பு. து. ரத்தினம் பிள்ளையவர்கள் இதை யுத்தேசித்துப் பரிமேலழகர் உரையைச் சாமான்னியத் தமிழில் பொழிப்பாக எழுதிப் பிரசுரஞ்செய்திருக்கிறார். அவர் செய்தவரை காரியம் நல்லதுதான். ஆனால் இங்கிலீஷில் இம்மாதிரிப் புஸ்தகம் எழுதுவோர் செய்கிறபடி, நாயனருடைய இடம், காலம், குலம் முதலியவற்றைச் சற்று ஆராய்ந்தும், குறளின் விஷயத்தை பெரும் போக்காக விமர்சனம் செய்தும் வந்திருப்பாராயின் இன்னும் உபகாரமாக விருந்திருக்கும். நாளதுவரை யொருவரும் இதைச் செய்யவில்லை யென்பதுகொண்டே நாம் இதில் பிரவேசித்தோம். இனிச் சாவகாசமுள்ள போதெல்லாம் ஒவ்வொரு தலைப்பில் ‘அறம்,’ ‘பொருள்’ ஆகிய இருபாலையும் உதாரணத்துடன் விமர்சனம் செய்து வருவோமாக.

# புஸ்தக விமர்சனம்

1. சந்நியாசி கீதமும், பாரத ஜாதிய கீதமும். ம. கோபாலகிருஷ்ண அய்யர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர். விவேகபாநு அச்சுக்கூடம். விலை அணா 2.

இவை ஸ்ரீமான் காலஞ்சென்ற விவேகானந்த சுவாமிகளும் ஸ்ரீமதி ஆந்தன் அம்மையும் முறையே ஆங்கிலத்தில் செய்த கீதங்களின் மொழிபெயர்ப்பாம். அவற்றின் ஸாரத்தைத் தமிழில் கூடியமட்டில் வருவித்துச் சாமான்னியரும் படித்து ஆனந்தப்படும்படி பண்டிதர் முயன்றிருக்கிறார். ஆதலால் அவர் மனோபீஷ்டம் முடிவு பெறுமென்று நம்புகிறோம்.

2. இந்து தூக்க சிகிச்சா சாஸ்திரத்துடன், ஸ்ரீ சுப்பிரமணியர் ஸர்வரோக நிவாரண மாந்திரீகம். சு. இராமசுவாமி அய்யர். விலை ரூபா 1-8-0. “மந்திரமில்லாமல் அக்ஷரமில்லை. மருந்தாகாத மூலிகையில்லை,” என்பது பழைய வாக்கியம். அதையனுசரித்து இந்தத் தேசத்திலும், வேறு தேசங்களிலும் பல முறைகளேற்பட்டுச் சிலகாலம் தழைத்தும், வேறு சமயங்களில் வாடியும் வந்திருக்கின்றன. நமக்கு விஷயம் தெரியாததலால் புஸ்தகத்தின் யோக்கியதையைக் குறித்துப் பேசுவது அழகல்ல. மொத்தத்தில் மந்திரங்களைக் குருமுகமாய் உபதேசம் பெற்று, உருவேற்றிப் பலன் பெறவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இக்கால தருமத்தை அனுசரித்துப் புஸ்தகமூலமாயும் பலனடையலாமானால், அதற்கு இது ஏற்ற கருவியாகலாம். முக்கியமாய் இது சிகிச்சையைப் பற்றியதாதலால், இந்த முறையில் பக்தியுள்ள இஷ்டர்கள் இதைக் கைபாண்டு நயநஷ்டங்களை வெளியாக்குவாராக.

3. ஸ்ரீமத் பாகவத வினவிடை. முதல்பாகம். ஸ்ரீமான் ஆ. ஸீ. கஸ்தூரிரங்க அய்யரவர்களியற்றியது. விலை ரூ 1. ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர்.

இதில் ஸ்ரீமத் பாகவதம் முதலிய ஒன்பது ஸ்கந்தங்களின் சாரத்தை அய்யரவர்கள் திரட்டிச் சேர்த்திருக்கிறார். சில சித்திரப்படங்களும், பழைய சம்பிரதாயம், புதுச்சம்பிரதாயம் இரண்டும் கலந்து காணுகின்றன. நடை, விஷயம் இரண்டும் குறைவற்றே யிருக்கின்றன. ‘வினவிடை’ விஷயத்தில் மட்டும் நாம் முன் எழுதியது பிசகென்று காண

வில்லை. அய்யாவர்களுக்கும் தமது மதம் உறுதியாகப் பிடிபட்டிருப்பதுபோலும்.

பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரம்.—பிழைக்கும்வழி, விவேகபோதினி, சக்கரவர்த்தினி, வித்தியாபானு, ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மாதர் மனோரஞ்சனி, மங்களோதயம் (மலையாளம்), இருஷிகன், பிரபஞ்சம்.

பக்ஷாந்தரம்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாராந்தரம்.—நீலலோசனி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, திராவிடாபிமானி, வித்யாபாஸ்கரன், பாண்டியன், விஜயா, நாகர் கோவில் டைம்ஸ்.

வாரம் இருமுறை.—மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

ஸ்ரீமான் வி. ஏ. கோபாலகிருஷ்ணய்யரை 'விஹாரிணி' அபிமானிகள் அறிவார்கள். 'வாமதேவன்' என்ற கதை தொடர்ச்சியாய் 3-நெம்பருக் கதிகமாகவே வந்திருக்கிறது. இன்னும் வருமென்றே நாம் நம்பியிருந்தோம். அப்படியிருக்க ஈசுவர சங்கற்பம் வேறாகி, அவர் சென்ற பங்குனிமீ 1வ தெய்வகதியடைந்து விட்டதாகக் கேட்டு மெத்தவும் விசனிக்கிறோம். தமிழ் அபிவிர்த்தி விஷயத்தில் அவருக்கு இருந்த ஆக்கிரகம் இவ்வளவென்று ரூபிக்க நம்மிடத்தில் அவருடைய கடிதங்களும், இரண்டொரு வியாஸங்களுமிருக்கின்றன. 'குணசீலன்' என்னும் நாவலொன்று மட்டும் பூராவாக வெளிவந்திருக்கிறது. இவர் மனைவிக்கு 17-வயது தானென்று கேட்டு மெத்தவும் வியாகூலமடைகிறோம். ஈசுவரன்தான் அந்த அம்மாளுக்கு வேண்டிய தைரியத்தை அருளவேண்டும்.

***

எத்னா எரிமலை புகைந்து கற்குழம்பு பெருகி அனேக சங்கடங்கள் முதலில் விளைந்தபோதிலும், முற்காலத்தில் இரண்டொருமுறை நடந்த மாதிரி வெடித்துப் பெரிய அனர்த்தமொன்றும் இதுவரை காணோம். இனியும் அப்படி யாகாமலிருக்கும்படி ஈசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

***

" மீசையைச் சிரைத்து விடுதலேசுகாதாரமார்க்கமாம். இல்லாவிட்டால் பலவித நோய்களுக்கு இடமுண்டாம். நாம் சுவாசத்தை வெளிவிடும்போது அந்தச் சுவாசத்தில் நம் தேகத்துள் இருக்கும் அசுத்தங்களின் அணுக்களெல்லாம் கலப்புண்டிருப்பதால் அவைகள் வெளிப்படும்போது காற்றுமட்டும் ஆகாயத்தில் கலந்துவிட, கனமான அணுக்கள் மீசையின் அடிப்பக்கங்களில் ஒட்டிக்கொண்டு விடுகின்றனவாம். இவைகள் வேர்வை முதலிய பலவற்றால் காளடைவில் அழுகி நம் சுவாசம் உட்கொள்ளும் போது அதனுடன் இந்த விஷ அணுக்கள் தேகத்திற்குள் சென்று வியாதிகளை உண்டாக்குகின்றனவாம். ஆகவே மீசையைச் சிரைத்துவிடுவதே சிலாக்கியமென்று சொல்லப்படுகிறது. பிழைக்கும்வழி.

***

சுகாதார முறைப்படியும், அனுபவப்படியும் இது சரியாகவே யிருக்கலாம். ஆனால்உலகத்தில் ஒவ்வொரு ஜாதியாரிலும், ஒவ்வொரு குலத்தாரிலும் சில வழக்கங்கள் சம்பிரதாயமாகி வந்திருக்கின்றன. அந்த முறையையும் நாம் அலக்ஷியஞ் செய்வதற்கில்லை. தவிர ஆண்பிள்ளை முகத்திற்கு மீசையும் தாடியும் நன்றாக வளர்ந்திருப்பது தான் அழகென்று ஒரு வைத்தியரே எழுதியிருக்கிறார். தென்னிந்தியாவில் கீழ்மேல் கடலோரங்களில் சில ஜாதியாரைத் தவிர மற்றெல்லோரும் மீசை வளர்ப்பவர்களே.

***

வடபெண்ணை நதியோரத்தில் கோரிபிதினூர் தாலூக்காவில் 'விதுர அசுவத்தம்' என்னும் வெகு நாளைய அரசமரம் ஒன்று இருப்பதாகவும், ஔஷதங்களால் சொஸ்தமடையாத அனேகம் வியாதிஸ்தர்கள் அங்குவந்து ஸ்நானம்செய்து அதைப் பிரதக்ஷிணஞ் செய்துவந்து சௌக்கியப்படுகிறார்களென்றும் ஒருவர் எழுதுகிறார். மற்றொருவர் கூடலூர் ஜில்லா ஸ்ரீமுஷ்ணம் என்னும் ஸ்தலத்தில் இவ்வாறே யொரு பெரிய அரசமரம் இருந்து அனேகருக்கு உபகாரியாயிருப்பதாக எழுதுகிறார். இந்த யுகத்திலும் அனேக அற்புதங்கள் நமது கண்ணெதிரே நடந்துதான் வருகின்றன. தெய்வகதி விசித்திரமாகவே யிருக்கின்றது.

***

ஆரிய சமாஜக் கிளையாகிய 'சுத்தி சமாஜத்தாருடைய' யுக்திபலத்தினால் நாளதுவரை சுமார் 2000-பெயர் மகம்மதீய மதத்தையும், கிறிஸ்து மதத்தையும்விட்டு மறுபடி ஹிந்துக்களாகி வைதிக மதத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். இதனால் நாமறியக்கூடியது இது. வைதிகமதம் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து ஜனங்களுக்கு நன்மையைக்கொடுத்துத் தானும் அழியாப்புகழ் பெறுமென்பதேயாம். இதரமதங்கள் புகழ் குன்றவேண்டுமென்பதாவது, நசிக்கவேண்டு மென்பதாவது, நமது அபிப்பிராயமல்ல. வைதிகமதம் தழைக்க வேண்டுமென்பதே. உலகம் இவையனைவற்றிற்கும் விஸ்தாரமாகத்தா னிருப்பதாக நமக்கு நம்பிக்கை.

## “விளையாட்டு”

குழந்தைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரம் இது உறுதியும், அழகும், பளபளப்பு முள்ளது. விளக்கு தவலை, செம்பு போன்ற 32 சாமான்களடங்கியது. மத்திரம் சயிஸ் ரூபா 2-0-0 பெரிய சயிஸ் ரூபா 3-8-0

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டுப் பீதாம்பர வர்த்தகம்,
ஸ்ரீ காசி.
Benares City.

## “பட்டுப் பீதாம்பரங்கள்”

சகல விதமான பட்டுப் புடவைகள், சால்வைகள், ரவிக்கைகள், பஸ்க்கானுக்கள், வேஞ்சிகள், உருத்திராக்ஷம், பால்காயம், கஸ்தூரி, முதலிய தினுசுகள் சகாய விலைக்கு விற்பனை செய்து வருகிறோம். 64 பக்கமுள்ள ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம்,

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டுப் பீதாம்பர வர்த்தகம்,
ஸ்ரீ காசி,
Benares City.

---

# LODHRA

## ஸ்திரிகளுக்கு ஓர் வரப்பிரஸாதினி


## “லோத்திர”

ஸ்திரீகள் மாதவிடாய் ஆகும்போதும் அதற்கு முன்னும், பிறகும் பொறுக்க முடியாத வயிற்று வலி, (முட்டுநோய்) சூலையில் மிகவும் வருத்தப்படுகிறார்களென்பது, எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. “லோத்திரா” மருந்தினால் மேற்சொன்ன முட்டுநோய் சவுக்கியமாகிறதுமல்லாமல் குசுமரோகம், காலத்தில் மாதவிடாய் ஆகாமலிருப்பது, மாதவிடாய் ஆகாமலிருப்பதும் மூர்ச்சை கீல்நோய்கள் தலைநோய், மலபந்தம், வெளுமை இன்னும் அனேக ரோகங்களும் சந்தேகமில்லாமல் சவுக்கியமாகின்றன. இம்மருந்தை உபயோகித்தால், முகத்திற்கு தேஜஸும், சரீரத்திற்கு பதத்தையும் உண்டாக்கி இப்பிரபஞ்ச சுகங்களை நன்றாய் அனுபவிக்கும்படி செய்கிறது.

அநேக ஸ்திரீகள் சந்தானமில்லாமல் அரசமரப்பிரதக்ஷணம், அனுமான் பிரதக்ஷணம், நாகப்பிரதிஷ்டை முதலியவைகளைச்செய்து, அநேக புண்ணிய க்ஷேத்திரங்களைச் சேவித்தவர்களாகி, அவைகளின் பலனை அடையமாட்டாமல், கடைசியாக, எங்களுடைய “லோத்திரா” என்னும் அவுஷதத்தை உபயோகித்து புத்திரன் புத்திரி என்னும் ரத்தினங்களையடைந்து சுகமாக இருக்கிறார்கள்.

இதன் விலை 12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 3 ; 6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 1-10-0.

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
பந்தர் வீதி, சென்னை.



எம். கே. கந்தி அவர்கள்